Shalom

ஆண்டு சந்தா ரூ. 60/–

மலர் : 6 இதழ் : 10 ஆகஸ்ட் – 2010

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்




**கர்த்தர் தேசத்துக்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்.**

2 சாமு. 24:25

ஆசிரியர்

சகோ. வே. தேவதாஸ்



சுதேச ஊழியர் சாட்சி

## சகோ. தேர்சிங் டாமோர்

குஜராத்

சகோ. தேர்சிங் டாமோர் குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டம், வாங்கோல் பகுதியிலுள்ள சிமளியா கிராமத்தை சேர்ந்த பீல் ஆதிவாசி சகோதரர். இங்கு வாழும் மக்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி எந்த அறிவும் இல்லாமல் அனைத்து வகையான பாவங்களுக்கும் அடிமைப்பட்டுக் காணப்படுகிறார்கள். சாராயமும் மந்திரவாதமும் இவர்களைவிட்டு பிரிக்க முடியாத ஒன்றாகும். இத்தகைய பின்னனியில் உள்ள தேர்சிங் டாமோரும் இயேசுவைப் பற்றி எந்தவித அறிமுகமும் இல்லாமல் மனம் போல வாழ்ந்து வந்தார். இவருடைய நினைவு தெரிந்த நாளிருந்து அசுத்த ஆவிகளையும் மந்திரவாதிகளையும் வழிபட்டு வந்தார். ஆனால் 1990ல், திருமணம் முடித்த சில நாட்களிலேயே இவருடைய வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்பட ஆரம்பித்தது. இவர் மிகவும் கடுமையான வியாதியினால் பாதிக்கப்பட்டார். தன்னுடைய மூடப்பழக்கவழக்கத்தின்படி மந்திரவாதிகளிடம் சென்று பல்வேறு பூஜைகள் செய்தும் எந்த பலனும் ஏற்படவில்லை. தாகோத் பகுதியிலுள்ள பெரிய மருத்துவர்களிடம் சென்று 3 வருடம் மருந்துகள் சாப்பிட்டும் சிறிதும் முன்னேற்றமும் உண்டாகவில்லை. மந்திர பூஜைகளும் கைகொடுக்க வில்லை. அசுத்த ஆவியின் பிடியின் நிமித்தமாக சுபாவமும் முரடாக மாறியது. இந்நிலையில் உறவினர் ஒருவர் மூலமாக வாங்கோல் கிராமத்தில் நடைபெற்றுவரும் ஷாலோம் ஆராதனையைக் குறித்துக் கேள்விப்பட்டு, ஆராதனையில் கலந்த கொண்டு ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

தேவன் செய்த இந்த அற்புதத்தின் மூலம், இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் வளர்ந்த இவர் தனக்கு விடுதலை கொடுத்த இயேசுவுக்கு ஊழியம் செய்ய தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். ஷாலோம் ஊழியர் தேவனுக்கு ஊழியம் செய்வதன் அவசியத்தைப் பற்றி இவருக்கு விளக்கிக் கூறவே, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து குறுகிய கால பயிற்சி பெற்று தன்னுடைய சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார். இவருக்காக இவருடைய குடும்பத்திற்காக பாரத்துடன் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **St, George's C.S.I. Church,** Madurai.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!*

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்களை பணித்தளத்திலிருந்து தெரிவிக்கிறேன்.

இந்த மலர் மூலமாக உங்களை தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இம்மட்டுமாக கடந்த ஏழு மாதங்கள் நம்மை நடத்தி வந்த தேவனைத் துதிப்போம். இந்த ஆகஸ்ட் மாதத்திலும் தேவன் ஆசீர்வதித்து நம்மையும், நம்முடைய சபைகளையும், ஊழியங்களையும், தேசத்திற்கு ஆசீர்வாதமாக உயர்த்துவாராக!

ஆகஸட் 15ம் தேதி நம் தேசத்தின் சுதந்திர தினம். நம் பாரத தேசத்திற்காக தேவனை துதித்து, நம் பாரத தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும், நம் பாரத தேசத்தின் சபைகளின் எழுப்புதலுக்காகவும், சபைகள் தேசத்திற்கு ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள். தேசத்தை ஆளுகை செய்யும் அதிகாரிகள் அனைவரும் தெய்வ பயத்துடன் உண்மையாக ஆளுகை செய்ய ஜெபிப்போம். மேலும் தீவிர வாதங்கள், உள்நாட்டுக் குழப்பங்கள், மதக் கலவரங்கள், இயற்கை சீற்றங்கள் இவற்றிற்கு நீங்கலாக்கி தேசத்தில் சமாதானமும், பொருளாதார நன்மைகள் கிடைக்கவும், ஏற்ற காலத்தில் மழையும் பெய்யவும் ஜெபியுங்கள்.

01.07.10 அன்று ஷாலோம் ஊழியத்தில் 19 வருடங்களை முடித்து, 20வது ஆண்டில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபை தந்தார். தேவனுக்கே மகிமை! 03.07.2010 சனிக்கிழமை அன்று மூத்த சுதேச ஊழியர்கள் மற்றும் போதகர்களாக மொத்தம் 150 குடும்பங்கள் இணைந்து தாகோத்தில் ஸ்தோத்திர கூடுகை நடத்தினோம். 20 வது ஆண்டில் தேவனுக்காக ஒவ்வொருவரும் அர்ப்பணித்து ஊழியங்களை நடத்தவும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவும், ஜெபிக்கவும், தேவனுக்காகக் கொடுக்கவும் தீர்மானித்துள்ளார்கள்.

08.07.2010 அன்று எங்கள் இல்லற வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்ய கர்த்தர் செய்த கிருபைக்காக அவரைத் துதிக்கிறோம். அந்த நாளில் எங்களை தொலை பேசி, எஸ்.எம்.எஸ், இ–மெயில் போன்றவற்றிலும் நேரிலும் வாழ்த்தி, ஆசீர்வதித்து, அன்பளிப்புகள் கொடுத்த அனைவருக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அந்த நாளில் கோவையில் நானும் என் மனைவி மற்றும் பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா அனைவரும் இணைந்து தேவனைத் துதிக்கவும், குடும்பமாக ஐக்கியம் கொள்ளவும் தேவன் கிருபை பாராட்டினார். மேலும் எங்களது ஆவிக்குரிய தகப்பனான பாஸ்டர் ஜோயல் அனந்தராஜ் அவர்களும் குடும்பமாக எங்களுடன் இணைந்து தேவனை துதித்து, ஜெபித்து, தேவனுடைய வார்த்தையை வழங்கினார்கள். அந்த நாள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

தொடர்ந்து பணித்தளங்களில் ஜுலை 12,13 ஆகிய நாட்களில், குஜராத் ஊழியர் கூடுகை, ஜுலை 16ம் தேதி மத்தியப்பிரதேசம் ஊழியர் கூடுகை, 21&24 தேதிகளில் இராஜஸ்தான் ஊழியர் கூடுகை நடத்துவதற்கு தேவன் கிருபை செய்தார். ஜுலை 15முதல் 17 வரை Dr. Abel, Dr. Jolly, Dr. Inba ஆகிய மூவரும் பணித்தளத்திற்கு வருகை தந்து Sharon Memorial Clinic மற்றும் இதர மருத்துவப் பணிகள், சுகாதாரப் பயிற்சித் திட்டங்களைக் குறித்து Dr. Sheju அவர்களுடன் இணைந்து கலந்தாலோசிக்க தேவன் கிருபை செய்தார்.

நாம் தாங்கி வரும் ஆதிவாசி மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேவ மகிமைக்காகப் பிரகாசிக்கிறார்கள். இதுவரை சுமார் 1300 மாணவர்களை தாங்கி வருகிறோம். எப்படியாவது தேவ கிருபையினால் 10 ஆயிரம் ஆதிவாசி மாணவர்களை படிக்க வைத்து உயர்நிலைக்குக் கொண்டு வர வேண்டும். அவர்கள் சபைக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்க ஜெபியுங்கள்.

ஊழியப்பாதையில் ஊழியங்கள் வேகமாக வளரும்போது அதிகமாக நிதி தேவைப்படுகிறது. தயவாக நீங்கள் யாவரும் குறைந்தது ஒரு ஆதரவாளரையாவது அறிமுகப்படுத்த அன்புடன் கேட்கிறோம். 20 வருட நிறைவு விழா திட்டத்தின் கீழ் ஷாலோம் ஆயுள்கால அங்கத்தினர்களை இணைக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம். ரூபாய் ஆயிரம் ஒருமுறை செலுத்தி ஆயுள்கால அங்கத்தினராக இணையும் 1000 பேர்களை அறிமுகப்படுத்துங்கள். இந்த நிதி உதவி மூலமாக மாதந்தோறும் தடை ஏதுமின்றி ஊழியங்களை நடத்திச் செல்ல ஜெபத்துடன் உதவி செய்யுங்கள்.

தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் Projects –ல் பணிசெய்யும் தேவப்பிள்ளைகளையும், முன்னேற்றப்பணி செய்யும் தேவப்பிள்ளைகளையும் மற்றும் பிரதிநிதிகளாக செயல்படும் தேவப்பிள்ளைகளையும் தேவன் ஆசீர்வதிக்கவும், அவர்களுக்கு நல்ல சுகத்தைக் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

**"கர்த்தர் தேசத்துக்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்"**

**(2சாமு. 24:25)**

தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

நம் தேசத்தில்

# LojRo ùT¬V Lô¬VeLû[ ùNnYôo

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

*பிரியமானவர்களே...*

யோவேல் 2 : 21 – 32 வரை வசனங்களை தியானித்துப் பார்க்கும்போது, அதில் கர்த்தர் நான்கு விதமான பெரிய காரியங்களைச் செய்கிறார். அவற்றை நாம் ஒன்றன்பின் ஒன்றாக காண்போம்.

### 1. பட்சித்த வருஷங்களின் விளைவைத் திரும்ப அளிக்கும் பெரிய காரியம் (யோவேல் 2 : 25)

தேவ ஜனத்திற்காக தேவன் வாக்குத்தத்தம் செய்கிறார். பட்சித்த வருஷங்களின் விளைவை திரும்ப அளிப்பேன். கடந்த நாட்களிலும், தேவ பலனை அடையாமற் போய் விட்டாயா? சோர்ந்து போகாதே! தேவன் இழந்துபோன பிரயாசத்தின் பலனை திரும்பச் சேர்த்து வரும் நாட்களில் கட்டாயம் தருவார்.

கடந்த நாட்களில் என் பிரயாசங்களில், உழைப்புகளில், ஊழியங்களில், பலனில்லையே என்று சிந்திக்கிறாயோ? தேவன் பட்சித்த வருஷங்களின் விளைவை திரும்பக் கொடுப்பார். ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? தேவ ஜனம் கர்த்தரிடத்தில் மனப்பூர்வமாக திரும்ப வேண்டும் (யோவேல் 2:13) வெளிப்பிரகாரமாக இஸ்ரவேல் ஜனம் வஸ்திரங்களை கிழித்து தேவனிடத்தில் மனந்திரும்புகிற வெளிவேஷமல்ல. இருதயத்தை கிழித்து உள்ளான மனந்திரும்புதலை தேவன் உன்னிடத்தில் எதிர்பார்க்கிறார். நீ கடந்த வருடங்களில், நாட்களில் ஆண்டவரை துக்கப்படுத்தின காரியத்திலிருந்து நீ மனந்திரும்ப வேண்டும். வெளிப்பிரகாரமாக மனிதர்கள் காணும் வஸ்திரங்களைக் கிழித்து தேவனண்டை திரும்பும் பக்திவேஷமல்ல, உண்மையான மனந்திரும்புதல். அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்.

கர்த்தரிடத்தில் முழு மனதுடன் தேவ ஜனம் ஒப்புக்கொடுக்கும் போது **“களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சை ரசமும், எண்ணெயும் வழிந்தோடும்.”** (யோவேல் 2:24) **“கர்த்தருக்கு போஜனபலிகளையும், பானபலிகளையும் செலுத்துவதற்கான ஆசீர்வாதத்தை தந்தருளுவார்.”** (யோவேல் 2:14) இந்த ஆண்டில் தேவன் உங்களை ஆசீர்வதித்து, தேவனுக்காக கொடுக்கவும், ஊழியங்களைத் தாங்கவும் உங்களை உயர்த்துவார்.

### 2. சம்பூரணமாக ...... திருப்தியடைந்து ...... அதிசயமாய் நடத்தி வரும் பெரிய காரியம்

நாம் தேவ பிள்ளைகள். தேவனிடத்தில் மனந்திரும்பும்போது, ஒப்புரவாகும் போது

தேவன் மகிழ்ச்சியடைகிறார். எனவே அவர் நம்மை சம்பூரணமாக ஆசீர்வதிக்கிறார். திருப்தியடையச் செய்கிறார். அதிசயமாய் நடத்திச் செல்கிறார். நாங்கள் தேவ பணி செய்யும் பீல் ஆதிவாசி மக்கள் பெரும்பாலும் குடிகாரர்கள், கொள்ளைக்காரர்கள், மந்திரவாதிகளை நாடிச் சென்று பிசாசின் பிடியில் சிக்கியிருக்கும் ஜனங்கள். இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழாக உள்ளார்கள். ஆனால் இயேசுவை விசுவாசித்து இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்பு அவர்கள் வாழ்க்கையில் செழிப்பும் ஆசீர்வாதமும் பெருகின.

பாரேவா கிராமத்தில் மகன்பாய் என்பவர் குடும்பத்தையும், வரம்கேடா கிராமத்தைச் சேர்ந்த நர்சிங்பாய் என்பவர் குடும்பத்தையும் நான் அறிவேன். சில வருடங்களுக்கு முன்பு அவர்கள் ஜெபிக்க வந்த போது பிசாசுகள் பிடித்து, பில்லிசூனியத்தால் பாதிக்கப்பட்டு, குடித்து, நிலம், வீடு ஆஸ்திகளை விற்று, தரித்திரராகி, நோயுற்று உயிர் வாழ்வது எதற்காக என்ற நிலையில் இயேசுவைப் பற்றி அறிந்து ஜெபிக்க வந்தார்கள். எந்தவித பலிகள் செலுத்தாமல், செலவின்றி, வருத்தமின்றி இலவசமாக இயேசுவின் அன்பைப் பெற்று விடுதலையடைந்தார்கள். இன்று அவர்கள் சொல்லுகிறார்கள் பாவங்கள், சாபங்கள் நீங்கி, வீடுகள் கட்ட தேவன் உதவினார். வயல் நிலங்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் விளைச்சல், கடன் தொல்லையெல்லாம் நீங்கி விட்டது. தரித்திரம் நீங்கி மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக வாழ தேவன் உதவினார். ஊழியங்களுக்கு அதிகமாக காணிக்கை கொடுக்கிறோம் என்று சாட்சி கூறினார்கள். அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கை வனாந்திரம் போன்ற வாழ்க்கையோ, நம்பிக்கையற்ற வாழ்க்கையோ, தேவனை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள். விசுவாசியுங்கள். ஏனென்றால் அவர் நாமம் அதிசயமானது. உங்கள் வாழ்வில் அற்புதங்கள், அதிசயங்கள் இவ்வாண்டு காணச் செய்வார். முன்மாரியையும், பின்மாரியையும் ஊற்றுவார். **“வனாந்திரத்லே மேய்ச்சல்கள் உண்டாகும்”.** (யோவேல் 2:22,24) சம்பூரணமாகி, திருப்தியடைந்து அதிசயமாய் நடத்தி வந்த கர்த்தரைத் துதிப்பீர்கள்.

**3. ஆவிக்குரிய நன்மையான ஈவுகளை ஊற்றும் பெரிய காரியம்**
**“அதற்கு பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.” “ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்”.** (யோவேல் 2 : 28,29)

பழைய ஏற்பாட்டில் தேவ ஆவியானவரின் அபிஷேகம் தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள் மீது ஊற்றப்பட்டது. ராஜாக்கள், தீர்க்கதரிசிகளை தேவன் ஊழியர்களாக அபிஷேகித்தார். தேவன் செயல்படும் வேலைகளில் இறங்கி வந்து செயல்பட்டார். ஆனால் வேதம் சொல்லுகிறது. **“பூர்வகாலங்களில் பங்குபங்காகவும், வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம்பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம்பற்றினார். இவரை சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்”.** (எபி 1:1,2) குமாரன் இயேசுவின்

மூலமாக இரட்சிப்பு மட்டுமல்ல வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆவியானவரும் நம்மீது ஊற்றப்படுகிறார். உலக ஆசீர்வாதங்கள் மட்டுமல்ல மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன் என்கிறார். நம் குமாரர், குமாரத்திகள் மீதும் ஊற்றுவார். தேவ பணிவிடை செய்யும் அனைத்து ஊழியர் மீதும் ஊற்றுவேன் என்கிறார். அவர் ஆவியை ஊற்ற ஆயத்தமாயிருக்கிறார். நாம் தான் விசுவாசத்துடன், வாஞ்சையுடன் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆவியில் நிரப்பப்படுதல் மட்டுமல்ல, மேலான உன்னத அனுபவங்களையும் தருகிறார். தீர்க்கதரிசனம் சொல்லும் வரங்களையும், அற்புதங்களைச் செய்யும் வரங்களையும், சொப்பனங்களையும், தேசத்தைக் குறித்தும் ஊழியங்களை குறித்தும் தரிசனங்களையும் தேவன் தர வாக்குக் கொடுக்கிறார்.

இதை வாசிக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே ஆவிக்குரிய வாழ்வில் நீ பெலன் கொள். சத்துருவை மேற்கொள். உலக ஆசீர்வாதங்களை மட்டுமல்ல, உன்னத அனுபவங்களையும் தேவன் இந்த வருடத்தில் உங்களுக்கும், உங்கள் குமாரர், குமாரத்திகளுக்கும், உங்கள் சபையின் மூப்பர்கள், உங்கள் ஊழியத்திலுள்ள அனைத்து பணிவிடைக்காரர்களுக்கும் தேவன் தர ஆயத்தமாயுள்ளார். வாஞ்சித்து ஜெபித்து பெற்றுக்கொள்ளுங்கள். இது ஆவிக்குரிய நன்மையான ஈவுகளை ஊற்றும் பெரிய காரியம் ஆகும்.

**4. கர்த்தர் தமது தேசத்திற்காக வைராக்கியம் கொள்ளும் பெரிய காரியம்**

2010–ம் ஆண்டில் நம் தேசத்தில் தேவன் வைராக்கியம் கொண்டு தேவ ஜனத்தை கடாட்சிப்பார். (யோவேல் 2:18) கர்த்தர் சொல்கிறார். "தேசமே (தேவ ஜனமே) பயப்படாதே மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்". (யோவேல் 2 : 21)

நாம் சபையாக, தேவ சபையாக என்ன செய்ய வேண்டும்? **"ஜனத்தைக் கூட்டுங்கள், சபையை பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்ணுகிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டு புறப்படுவார்களாக." "அப்பொழுது கர்த்தர் தமது தேசத்திற்காக வைராக்கியங்கொண்டு, தமது ஜனத்தை கடாட்சிப்பார்.;"** (யோவேல் 2 : 16,18)

கர்த்தர் சொல்கிறார். முதலாவது ஜனத்தைக் கூட்டுங்கள். ஒருமனதுடன், ஐக்கியத்துடன் தேவ ஜனங்கள் கூட வேண்டும். ஆதி அப்போஸ்தலர் காலத்தில் இருந்த ஒருமனம், ஐக்கியம் நமக்குத் தேவை. சபையை பரிசுத்தப்படுத்துங்கள். தேவ சபை பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும். தேவனுக்கு பிரியமில்லாதவற்றை விட்டுவிட்டு தேவ சித்தத்தை சபை பூர்த்தி செய்ய வேண்டும். முக்கியமாக 17–ம் வசனத்தில் தேவன் தேசத்திற்காக வைராக்கியம் கொள்வதற்காக கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்களுக்கு ஒரு பெரிய பொறுப்பு உண்டு. அவர்கள் மண்டபத்துக்கும், பலிபீடத்திற்கும் நடுவே அழுது ஜெபிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டு **"தேவ ஜனமாகிய நாம் ஆசாரியர்களாக, லேவியராக தெரிந்துகொள்ளப்பட்டுள்ளோம்."** (1 பேதுரு 2:9) தேவனிடத்திலிருந்து உலக ஆசீர்வாதங்களையும், ஆவிக்குரிய


ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்ட நாம் அமைதியாக, திருப்தியாக இருக்க கூடாது. தேசத்திற்காக தேவன் வைராக்கியம் கொள்ள தேவ ஜனத்தை கடாட்சிக்க அவர்கள் திறப்பின் வாசலில் நின்று ஜெபிக்க வேண்டும். இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெற்று தேவ பிள்ளையாக உன்னை தேவன் தேசத்திற்கு ஆசீர்வாதமாக மாற்ற விரும்புகிறார். தேசத்தில் காணப்படும் தீயசக்திகள், அந்தகாரங்கள் நீங்க ஜெபிக்க தேவன் அழைக்கிறார்.

அப்படியே தேவ ஜனம் கூடி கர்த்தாவே நீர் உமது ஜனத்தை தப்பவிட்டு புறஜாதிகள் அவர்களை பழிக்கும், நிந்தைக்கும் உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும். **"உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக".** (யோவேல் 2: 17) தேவ ஜனங்கள் தேசத்திற்காக ஜெபிக்கும் போது, தேவன் கட்டாயம் வைராக்கியம் கொள்வார். தேவ ஜனத்தை உபத்திரவத்திலிருந்து கடாட்சிப்பார். மட்டுமல்ல **"வானத்திலும், பூமியிலும் இரத்தம், அக்கினி, புகை ஸ்தம்பங்களாகிய அதிசயங்களை காட்டுவேன்".** (யோவேல்2:30) தேவன் மோசே, யோசுவாவுடன் இருந்தது போல நம் ஊழியங்களுடன், ஊழியர்களுடன், தேவ வசனத்துடன் நின்று கடாட்சிப்பார். கர்த்தர் தாமே இந்த நான்கு வகைகளான பெரிய காரியங்களை உங்கள் வாழ்க்கையிலும், நம் ஊழியங்களிலும் நடப்பித்து, இயேசுவின் நாமத்தை உயர்த்திட அருள்புரிவாராக.

## அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு...

# நினைவுப்படுத்துகிறோம்......

அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!



இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O, D.D, Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468 –** இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

# கோதுமை மணிகள்

1855–ல் லண்டன் மிஷனெரி ஸ்தாபனம் மூலம் மிஷனெரிகள் பீல் மக்களைச் சந்தித்தனர். இவர்களது Report அடிப்படையில் Irin Presbyterian ஸ்தாபனம் மிஷனெரிகளை பீல் மக்கள் மத்தியில் அனுப்பி ஊழியம் செய்தது. 1856–ல் லண்டன் மிஷனெரி ஸ்தாபனம் பீல் மக்கள் அறிவற்றவர்கள், படிப்பறிவு இல்லாத மற்றும் எந்தவித கடவுள் பக்தியும் அற்றவர்கள். ஆகையால் இவர்கள் மத்தியில் சேவை செய்வது மிகவும் விருப்பமாக உள்ளது எனக்கூறி பின்பு IP Mission –லிருந்து 2 மிஷனெரிகளை மக்களைச் சந்திக்கும்படி அனுப்பினார்கள். (Rev. G.T. Rey மற்றும் Mr. W.Dix) என்ற இவர்கள் கோத்ராவில் 2 சுதேச ஊழியர்களை ஏற்படுத்தினார்கள். ஆனால் ஊழியம் செய்யாததால் மிஷனெரிகளை முன்னேற்ற நாம் என்ன செய்யலாம்? என்று கேள்வி எழுப்பினார். 1887–ல் Rev. Dr. சிலேடி பீல் மக்கள் மத்தியில் விநியோகிப்பதற்கு ஒரு Tract தயார் செய்து அதை IP Mission Board –க்கு அனுப்பினார். இந்த நேரம் பெல்பாஸ்ட்–ல் ஒரு கூட்டம் நடந்தது. அதில் பஞ்ச்மஹாலில் இங்கிருந்து சுவிசேஷ ஊழியம் செய்ய மிஷனெரிகளை குஜராத்திற்கு (தென்கிழக்கு பகுதி) அனுப்பும்படியாய் நிர்ணயம் பண்ணினார்கள்.

1889– General Assembly –ல் Jungle Tribe Mission விஷயமாக பேச்சு நடந்தது. இதன் முடிவு 1890ல் நடந்த சபாவில் கிடைத்தது. இதில் 2 Hon Secretaries ஏற்படுத்தினார்கள். Rev. Dr. Rojers, Mr. Henry Mont Gamari ஆகிய இவ்விரு Hon Secretaries யும், ஜெபத்தோடு அதிகம் உழைத்தார்கள். I.P. Mission, Jangal Mission –ஐ ஊழியம் செய்வதற்கு Permission கொடுக்கவில்லை. Rev. G.T. Rey நடத்துவார் என்றார். I.P. Mission- யிடம் இந்தக் கட்டுப்பாடு இருந்தது. Rev. மற்றும் Pastors இந்த ஊழியத்திற்குப் போக அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் சபையில் உள்ள மூப்பர்கள், விசுவாசிகள் பயன்படுத்த அனுமதி கொடுத்தார்கள்.

முதல் முதலாக 15–12–1980ல் பீல் மக்கள் மத்தியில் மிஷனெரி ஊழியம் செய்ய சகோ. மல்லிங்கன் அவர்கள் Application கொடுத்தார். (I.P.Mission- ல்) உடனே அனுமதி கொடுத்து அனுப்பினார்கள். 09.01.1981ல் இவர் பஞ்ச்மஹால், ஜாலோத் ஜில்லாவுக்கு வந்தார்கள். ஒரு வருடம் குஜராத்தி மொழி படித்தார்கள். 09.01.1981ல் G.W. Blair என்பவர் இவருடன் இணைந்து ஊழியம் செய்தார்.

1894ல் G.W. Blair என்பவரை ஜாலோதில் மிஷனெரியாக நியமித்தார்கள். அந்த நேரம் ஜாலோத் தாலுகாவில் லிம்டி கிராமத்தை அலுவலகமாக வைத்து 3 வருடம் லிம்டியில் Tent ல் தங்கி அக்கம் பக்கம் உள்ள கிராமங்களில் ஊழியம் செய்தார்கள். மழை நேரத்தில் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கொடுத்து Guest House–ல் தங்கி மிகவும் கஷ்டப்பட்டு ஊழியம் செய்தார்கள். Jungle Tribe Mission வந்து 5 வருடங்கள் குஜராத், காட்டியாவாட் பகுதியில் ஊழியம் I.P. Mission- க்கு கீழாக இருந்து செய்தார்கள். பின்பு 10–01–1895–லிருந்து Jungle Tribe Mission தனியாக செயல்பட ஆரம்பித்தது. கி.பி. 1899 லிருந்து 1900 வரை மிகவும் பஞ்சம் வந்தது. Jungle Tribe Mission - G.W. Blar இவ்வாறு எழுதுகிறார். பீல் மக்கள் மத்தியில் இந்த பஞ்சத்தில் எல்லா இடங்களிலும் மரித்த பிணங்கள் (மலை போன்று) தான்

கிடந்தது. குஜராத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மரித்தன. 60 லட்சம் பேர் இந்த பஞ்சத்தில் பாதிக்கப்பட்டார்கள். 40% லிருந்து 50% பீல் மக்கள் இந்த பஞ்சத்தில் மரித்தார்கள்.

**பீல் மக்கள் மத்தியில் வந்த மிஷனெரிகள்**

தாகோத் தாலுகாவில் – Mr. & Mrs. மேக்கலின்; ஜாலோத் தாலுகாவில் – Mr&Mrs. மல்லிங்கண் சந்திராம்பூர் தாலுகாவில் – Mr. R.B. மோஹியானி ஆகிய மிஷனெரிகள் மரித்தார்கள். கி.பி. 1900ல் காகோக், ரோட்டியா, கெல்சர் பகுதியில் உதவி மையம் திறந்து பீல் மக்களுக்கு உதவினார்கள்.

18.08.1895ல் Mr. மல்லிங்கன் அவர்கள் மனைவி அதிக நோய்வாய்பட்டு மரித்தார்கள். சாரா மல்லிங்கள் அவர்களுடைய ஊழியம் இந்தியாவில் இரண்டு வருடத்திற்கும் குறைவாக இருந்தது. ஆனாலும் இவர்களுடைய சாந்த குணம், அன்பு எல்லோரும் உணர கூடியதாய் இருந்தது. பின்பு கூடிய Yearly Council Meeting –ல் இவ்வாறு கூறப்பட்டது. இந்த மிஷன் இவளுடைய மரணத்தினால் உயிரடையும் என்று கூறினார்கள். 14.08.1901ல் சகோ. மல்லிங்கன் பயங்கரமான காலரா நோயினால் பாதிக்கப்பட்டு பின்பு மரித்தார். இன்றும் இவர் கல்லறை ஜாலோத்தில் உள்ளது. மல்லிங்கன் மரித்த கொஞ்ச நாளில், இவர் அன்பு மகள் ஆக்னஸ் மரித்தாள். இந்த நேரத்தில் Mr. G.W. Blar ஜாலோத் பகுதியைப் பொறுப்பெடுத்தார். இதற்கு முன்பு இவர் சந்த்ரோடு பகுதியில் ஊழியம் செய்து வந்தார்.

Mr. G.W.Blair ஜாலோத்தில் Post -office க்கு பக்கத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து, அங்கிருந்து அக்கம் பக்கங்களில் ஊழியம் மற்றும் மருத்துவ உதவி செய்தார். ஜாலோத்தில் ஹாண்டி கிராமத்தில் உள்ள சகோ. நார்சிங் ஜெகஜி என்பவருக்கு 20–3–1898ல் G.W. Blar ஞானஸ்நானம் கொடுத்தார். கிபி 1985ல் மான்லிகூட்டாவில் தாவரா கான்ஜி இயேசுவை ஏற்றுக் கொண்டார். 3 வருடம் வாடகை வீட்டில் இருந்து பின்பு, அரசாங்கத்திலிருந்து நிலம் வாங்கி 1 மைல் தூரத்தில் மிஷன் பங்களா மற்றும் அனாதை விடுதி ஆகியவற்றை அமைத்தார்கள். அந்த விடுதியில் 100 பிள்ளைகள் இருந்தார்கள்.

இப்பொழுதும் அங்கும் ஆலயமும் மாணவர் விடுதியும் உள்ளது. G.W. Blar ஜாலோத்தில் இருக்கும்போது தேவன் இந்த ஊரில் ஊழியம் செய்ய விரும்பவில்லை என்று நினைத்தார். ஆனால் 5 கி.மீ. தூரம் வரை அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் ஜாலோத்திற்கு வருவார்கள். அங்கு வைத்து அமைதியாக வசனத்தைப் போதித்தார். 1902 வரை வேலை மிகவும் மெதுவாக இருந்தது. 1902க்கு பின் சபை வளர ஆரம்பித்தது. இவ்வாறாக வளர்ந்து மக்கள் இயேசுவை இரட்சகர் என்று அறிக்கை செய்தார்கள். 1902ல் 42 பேர்களும், 1903ல் 17 பேர்களும், 1904ல் 30 பேர்களும் ஞானஸ்நானம் எடுத்தார்கள்.

கிபி 1902ல் (18–10–02) மிஷனெரி G.W. Blar ன் குழந்தை தாமஸ் மெக்கரொனோ (8 Months 23 days) வியாதியினால் மரித்தது. கல்லறை ஜாலோத்தில் உள்ளது. பின்பு தாகோத், லிம்டி, காமடி என்ற புதிய கேந்திரம் திறக்கப்பட்டது. கிபி 1904ல் அரசாங்கத்தில் நிலம் வாங்கி காமடியில் மிஷன் ஆலயமும் வீடும் கட்டினார்கள்.

முதலாவது சுதேச ஊழியர் மோரார் மோட்டா இவருக்கு காமடி ஆலயத்தை கொடுத்தார்கள். 09–12–1903ல் முதல் Mission Council, தாகோத்தில் நடைபெற்றது. இதில் Mr. G.T. Rey என்பவரை Missionary elder ஆக பிரதிஷ்டை செய்தார்கள். கிபி 1905ல் ஜாலோத் மற்றும் அருகாமை கிராமங்களில் உள்ள மொத்த கிறிஸ்தவர்கள் 207 பேர் இருந்தார்கள். இதில் 142

பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். கிபி 1851 முதல் 1968 வரை 23 மிஷனெரிகள் I.P. மிஷன் மூலம் ஊழியம் செய்தார்கள்.

அதைத் தொடர்ந்து 1985ம் ஆண்டு IMS மூலமாக சகோ. தேவதாஸ் அவர்கள் குடும்பமாக நற்செய்தி பணியாளராக அனுப்பப்பட்டார்கள். அதன்பின்பு விஷ்வவாணி, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மேலும் அநேக மிஷனெரி ஸ்தாபனங்கள் ஊழியர்களை அனுப்பி பணியாற்றி வருகிறார்கள். குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளாக தேவன் நம்முடைய ஷாலோம் ஊழியத்தின் மூலம் முன்னோடி மிஷனெரிகள் விதைத்த கண்ணீர் நிறைந்த விதையின் பலனை, திரளான அறுவடை மூலம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். தேவனுக்கே மகிமையை செலுத்துகிறோம்.

**செய்தி தொகுப்பு : சகோ. சினேகல் பாய்,** CNI Church, Jhalod

**இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மிஷன்**

டுங்கர்பூர் ஜில்லாவில் வாசியா கிராமத்தில் வனஜாரியா என்ற பிரிவைச் சேர்ந்த கோவிந்த குரு (கால்நடை வியாபாரம் தொழில் செய்பவர்) என்று ஒருவர் இருந்தார். அக்காலத்தில் ராஜாக்கள் பீல் மக்களை மிகவும் அடிமைகளாய் நடத்தி வந்தார்கள். அப்பொழுது கோவிந்த் குரு எழும்பி பீல் மக்களை உற்சாகப்படுத்துமாறு நீங்கள் கீழ் மக்கள் கிடையாது நீங்கள்தான் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இந்த ராஜ்ஜியம் பீல் மக்களுடையது. நான் இந்த ராஜ்யத்தை உங்கள் கையில் வாங்கித் தருவேன் என்று கூறினார்.

டுங்கர்ப்பூர் ராஜா மஹாராவல், பான்ஸ்வாடாவில் ராஜா பிருத்துவி சிங்ஜி மற்றும் சந்த்ராம்புரின் சேனைகள் கோவிந்த குரு அவர்களுக்கு விரோதமாக எழும்பினார்கள். அப்பொழுது நிமச் என்ற இடத்திலிருந்து மேஜர் ஹேமில்டன் சேனைகளோடு மானகட் என்ற இடத்திற்கு வந்தார். இவரோடு டுங்கர்ப்பூர் மற்றும் பான்ஸ்வாடா சேனைகள் சேர்ந்து கோவிந்த் குருவிற்கு எதிராக யுத்தம் செய்யும்படி டிசம்பர் 1909ல் மானகட் வந்தார்கள். அந்த நேரம் கோவிந்த் குரு பீல் மக்களிடம் இவ்வாறு கூறினார் நீங்கள் பயப்படவேண்டாம். எல்லாரும் இந்த மலை உச்சியின் மீது சென்று விடுங்கள் என்றார். பீல் மக்கள் யாவரும் மலையின் மீது ஏறிவிட்டார்கள். அப்பொழுது மேஜர் ஹேமில்டன் இந்த மக்களைக் கலைந்து போகப் பண்ணும்படியாய் மேலே நோக்கி சுட்டார். ஆனால் கோவிந்த் குரு கூறினார் பாருங்கள் உங்கள் மீது ஒன்றும் படவில்லை. நான் தான் இதைத் தடுத்தேன் என்றார். உடனே மக்களும் நம்பினார்கள். மறுபடியும் மேலே நோக்கிச் சுட்டார் அப்பொழுதும் பீல் மக்கள் அசையவில்லை. ஆகையால் கோபம் வந்த மேஜர் எல்லோரையும் சுட்டுக் கொல்லுங்கள் என்று அனுமதியிட்டார். அநேகர் மிகவும் பரிதாபமான நிலையில் செத்து மடிந்தார்கள்.

அந்த நிலையில் கோவிந்த குரு ஒளிந்து கொண்டார். மீதியிருந்தவர்களையும், கோவிந்த குருவையும் பிடித்து பரோடா, அகமதாபாத், அஜ்மீர் சிறைகளில் அடைத்தார்கள். பின்பு மேஜர் ஹேமில்டன் மற்றும் சேனாதிபதிகள் இறந்த மக்களைப் பார்க்கச் சென்றபொழுது சிலர் மரித்தும் சிலர் கை, கால் இழந்து அடிபட்டும் கிடந்தார்கள். அதில் ஒரு சிறு குழந்தை தாயின் அரவணைப்பில் பால் குடித்துக் கொண்டிருந்தவாறே தாய் மரித்துக் கிடந்தாள். இதைப் பார்த்த பொழுது மேஜர் ஹேமில்டன் உள்ளம் உடைந்தது. அவர் வேதனையோடு தனது தலைமையிடமான நிமச்சிற்கு திரும்பினார். அந்நாட்களில் நிமச்சில் மிஷனெரிகளாக வந்து ஊழியம் செய்து கொண்டிருந்த Dr.D.G. கோக் மற்றும் குழுவினர்களிடம் மேஜர் ஹேமில்டன் வந்து மிகவும் துக்கத்துடனே, நீங்கள் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? அங்கு

பான்ஸ்வாடா சென்று அன்பான பீல் மக்களுக்கு ஊழியம் செய்யுங்கள். இவர்களுக்கு எழுதப்படிக்கச் சொல்லிக் கொடுங்கள்; போதியுங்கள் ஆண்டவருடைய அன்பை அவர்களுக்கு அறிவியுங்கள் என்று கூறினார்.

உடனே Dr. D.G. கோக் மற்றும் இவர் மனைவி மிஸ். கேம்பல் 1912–1913 பான்ஸ்வாடா வந்து சூரஜ்பால் கேட்க்கு பக்கத்தில் கூடாராம் போட்டு தங்கி இவர்களும் இவர்களைச் சேர்ந்த ஏழுபேர் அடங்கிய குழுவும் ஊழியம் செய்ய ஆரம்பித்தார்கள். அந்த 7பேர் திரு. இஸ்மாயிலி, திரு. மேக்மிலன், திரு. கிராண்ட், திரு. மாவிந், திரு. டாப்சன், திரு. காயீன், திரு. ஹேடர்சன் ஆவார்கள். Dr. D.G. கோக் மத் 25:35,36 ல் காண்கிறபடி சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கும் நோக்கத்துடன் மான்கட்டிலுள்ள சிறைக் கைதிகளை விடுதலையாக்கும் முயற்சி செய்து அவர்களை விடுவித்தார். பின்பு கோவிந்த் குருவிற்கு மரண தண்டனை போடப்பட்டிருந்தது. இவரையும் எப்படியாவது விடுவிக்கும்படி முயற்சி செய்தார். அவர் பரோடா ஜெயிலில் இருந்தார். அங்கிருந்து இவரை எடுத்து பாம்பே ஜெயிலில் போடக் கொண்டு போகும் வழியில் தாகோத்தில் இவரை சந்திக்க நேர்ந்தது. பின்பு இவர்தான் கோவிந்த் குரு என்று அறிந்து அவருடன் பேசினபோது அவரையும் விடுவிக்க முயற்சி செய்தார். இவர்மேல் இரண்டு கொலை வழக்கு இருந்தது. ஆனால் இவர் செய்யாத குற்றத்தைச் செய்ததாக வழக்கு இருந்ததால், இதிலும் முயற்சி எடுத்து விடுவித்தார்.

பின்பு கோவிந் குரு Dr. D.C. கோக்–க்கு முற்றிலும் கை கொடுத்து ஊழியம் செய்ய ஆரம்பித்தார். அவருக்கு வேதம் கற்றுக் கொடுக்கப்பட்டது. பின்பு கோவிந்த் குரு நான் 44,000 பீல் மக்களை நிச்சயமாக இயேசுவண்டை கொண்டு வருவேன் என்று கூறினார். இவருக்கு 10 கட்டளைகள் கற்றுக் கொடுக்கப்பட்டது. இதன்படி நடவுங்கள் என்றும் கூறப்பட்டது. பின்பு இவர் பள்ளிக்கூடம் மருத்துவமனை, மற்றும் சபைகளையும் உருவாக்கினார். பான்ஸ்வாடாவில் 7–2–1922ல் ஆலயத்தையும் காசநோய் மருத்துவமனையையும் திறந்தார். இதில் 25 மருத்துவர்கள் பணியாற்றினார்கள்.

பான்ஸ்வாடாவில் கூட்டா கிராமத்தில் மோத்தி பாய் தீரா பட்டேன் என்பவருடைய உறவினர்கள் குஜராத்தில் உள்ள தாவடியா கிராமத்தில் இருந்தபடியால் அவர் ஜாலேத்திற்குப் போய் இருந்தார். அவர் 1904ல் ஜாலோத்தில் மிஷனெரிகளின் ஊழியத்தின் மூலம் இயேசுவை ஏற்றுக் கொண்டு குஜராத்தில் பைபிள் வாசித்து ஞானஸ்நானம் பெற்றார். இவர்தான் பான்ஸ்வாடா மாவட்டத்தின் முதல் கிறிஸ்தவரானார். பின்பு இவர் அக்கிராமத்தில் ஏற்பட்ட அதிக எதிர்ப்புகள் மத்தியிலும் இயேசுவை விடாமல் இருந்தார். படா அகோரியாவிலுள்ள உறவினர்களையும் இயேசுவண்டை வழி நடத்தினார். பின்பு பிஜல்பூரிலும் சாகுவாவிலும் இவர் மூலம் ஆலயம் கட்டப்பட்டது. அகோரியா ரத்தன்பூரா, கேவடியா, கொட்டாரா, பமமேடி கிராமங்களில் 1954ல் ஆலயங்கள் கட்டப்பட்டன. ஐ.பி. மிஷன் மூலம் பான்ஸ்வாடாவில் 17–20 கிராமங்களில் ஊழியம் நடைபெற்றது. அதன் பின்னர் CNI பேராயத்தோடு சபைகள் இணைக்கப்பட்டன. அநேக வருடங்களுக்குப் பின் R.C. மிஷன், பிலதெல்பியா, RBI, மற்றும் இதர மிஷனெரி ஸ்தாபனங்கள் ஊழியம் செய்து வருகிறார்கள். தொடர்ந்து தேவன் நமக்குத் தந்த தரிசனத்தின்படியே நமது ஷாலோம் ஊழியமும் கடந்த 19 வருடங்களாக ஊழியம் செய்து

சபைகளை ஸ்தாபித்து தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டி வருகிறது.

**ஆதாரம் :** Banswada Church History written by Mr. Mallu Sardar Fauji

**மத்தியபிரதேசத்தில் நடந்த நற்செய்திப்பணி**

தோரன்மல் ஆலயம் மகாராஷ்டிரா மாநிலத்தின் கடல் மட்டத்திலிருந்து 3500 அடி உயரத்தில் விந்திய சாந்பூரா மலைத் தொடர்களில் உள்ளது. டாக்டர். புக்கான்நே 1898–ம் ஆண்டு இந்த இடத்தை சுற்றிப் பார்க்கச் சென்றபோது, இந்த இடத்தை பீல் மக்களின் கானான் தேசமாக மாற்ற வேண்டும் என்று நினைத்தார். அந்த இடத்தில் நிலம் வாங்கப்பட்டது. கால்நடைகளையும், தோட்டங்களையும் உருவாக்கினார். இந்த இடத்தில் ஆலயம் கட்டப்படுவதற்கு அங்குள்ள மக்கள்தான் முதன் முதலில் தேவனண்டை வந்தார்கள். ஆம்கூட் என்ற கிராமத்திலுள்ள பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகளை அங்கு கொண்டு சென்றார்கள். பள்ளிகூட போதனை, வேதபாடசாலைகள், சபைகள் மூலம் மக்கள் உருவாக்கப்பட்டனர். இந்த இடத்தில் 1914–லிருந்து 1920 வரைக்கும் இடைப்பட்ட நாட்களில் ஆலயம் கட்டப்பட்டது. முதலாவது, Forest பங்களா ஒன்று இருந்தது. அதில் முதலாவது Mission Field ஆரம்பிக்கப்பட்டது.

ஆலயம் கட்டப்பட்ட பின்பு பாஸ்டர். தேஜ்லா என்பவரை வைத்து ஆராதனை நடைபெற்றது. அங்குள்ள பள்ளிக்கூடத்தில் வேர்சிங் ராம்லால் என்பவர் பொறுப்பாக இருந்தார். 2 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இவர்கள் ஆம்கூட் பள்ளியில் படித்தவர்கள். ராம்சிங் பாவல் லால்சிங் என்பவரை ஆலயத்திற்கு பாஸ்டராக வைத்தார்கள். படுவானி ஆலயத்திற்கு கிளை சபையாக தோரன்மல் ஆலயம் இருந்தது. தோரன்மால் ஆலயம் பீல் மக்களுக்கு ஒரு Power House –ஆக இருந்தது. பின்பு நாசிக் பேராயத்தில் சேர்த்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து ஜாபூவா மாவட்டத்தில் சிச்சனியா (1903), மென்தா (1912), ஆம்கூட் (1914), அலிராஜ்பூர் (1921) படுவானி (1933), ஜோபட் (1933), புண்ணியவாப் (1970), பாரா (1965) மேலும் கத்திவாரா, பர்ஜெர் ஆகிய கிராமங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டது. CNI பேராயத்தில் இணைக்கப்பட்டது. பின் தொடர் ஊழியமும், ஆவிக்குரிய வளர்ச்சியும் குன்றினபடியால் சுமார் 40 வருடங்களில் அநேகர் பின்னடைந்து பழைய பாவ வாழ்க்கைக்கும், பிசாசின் பிடிக்கும் அடிமைப்பட்டார்கள். R.C. மிஷன் மூலம் சமூக பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஆங்காங்கே சபைகள் உருவானது. தேவ கிருபையால் கடந்த 16 வருடங்களாக ஜாபுவா மாவட்டத்தில் ஷாலோம் பணிகள் மூலமாக 160 சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட்டு 250 ஆராதனைக் குழுக்களையும், திரளான ஆத்துமாக்களையும் தேவன் தந்துள்ளார்.

**ஆதாரம் :** Vindhya Satpura 100th year Jubilee Calendar by CNI

பீல் மக்கள் மத்தியில் இவர்களைப் போல் கோதுமை மணியாய் உழைத்து மடிந்த
ஒவ்வொரு மிஷனெரிக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

# SHARON MEMORIAL HOSPITAL



## ஷாரோன் நினைவு ஆஸ்பத்திரி

*(Run By Shalom Charity Mission)*

தேவ கிருபையால் 15.06.2010 அன்று நம் குஜராத் பணித்தளம் ஜாலோதில் தேவன் தந்த மிஷன் இல்லத்தில் SHARON MEMORIAL HOSPITAL ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெறுகிறது. அநேகர் வந்து நல்ல சிகிச்சை மருந்துகளை பெற்று ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள். Dr. Shiju அவர்கள் தலைமையில் பணிபுரியும் மருத்துவ பணியாளர்களுக்காகவும், பல்லாயிரக் கணக்கான தேவையுள்ள ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். இதனைத் தொடர்ந்து 15,16,17 தேதிகளில் நம் ஷாலோம் ஊழியங்களையும், பீல் மக்களையும் அதிகமாக நேசித்து ஒவ்வொரு வருடமும் மருத்துவ முகாம்களையும், ஆரம்ப சுகாதார பயிற்சி வகுப்புகளையும் நடத்தித் தரும் Dr. Abel Rajarathinam, அவர்கள் அன்பு மனைவி Dr. Jolly Abel மற்றும் Dr. Inbakumar அவர்களும் வந்து மருத்துவ பணிகள் மற்றும் சுகாதார பயிற்சி முகாம் நடத்தினது மட்டுமல்லாமல் பீல் மக்களுக்கு பெரிய அளவில் மருத்துவமனை எழுப்பவும், சிறிய அளவில் கிளை மருத்துவமனைகளை உருவாக்கவும் அதற்காக பீல் மாணவர்களை படிக்க வைத்து மருத்துவப்பணியாளர்களாக உருவாக்குவது. மேலும் இப்பணிகளுக்காக வளர்ச்சி திட்டமிட கூறி வந்தோம். எங்களுடன் ஒரு கூடுகையில் 3 மாநில முன்னோடி ஊழியர்கள் மற்றும் ஷாலோம் ஊழியத்திலிருந்து Bro. Jeyaraj, Bro. Daniel Oswald, Bro. Garret, Bro. Wallace அவர்களும் இணைந்து திட்டமிட்டார்கள். ஆவியானவர் மிகத் தெளிவாக ஆலோசனை தந்துள்ளார். 3 மருத்துவர்களுக்காக தேவனை துதிக்கிறோம். வருங்காலத்தில் குறிப்பாக ஷாலோம் திருமண்டத்திலுள்ள அனைத்து குடும்பங்கள் நல்ல சுகத்துடனும், ஆரோக்கியத்துடனும் வாழவேண்டும் என்று பாரத்துடன் செயல்பட தீர்மானித்தோம். ஷாலோம் விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல, தேடி வரும் யாவருக்கும் மருத்துவ கடமைகளை செய்ய தீர்மானித்துள்ளோம்.

தொடர்ந்து உங்களில் மருத்துவ மற்றும் சுகாதாரப் பயிற்சித் திட்டங்களை நிறைவேற்ற பாரங்கொண்டால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| டாக்டர் மற்றும் அனைத்து மருத்துவ உழியர்களுக்கான செலவு | | 25,000 |
| மருத்துவ வகைக்கான செலவு | | 15,000 |
| மற்ற செலவுகள் (மின்சார கட்டணம் மற்றும் இதர செலவுகள்) | | 10,000 |
| ஒரு மாதத்திற்கான மொத்த தேவைகள் | ரூ. | 50,000 |

மேலும் இன்னும் தேவையான உபகரணங்கள் 1. Microscope 2. Bench , Chair and etc, 3. Fridge 4. Invertor & Battary.

***இவைகள் கிடைக்க பாரத்துடன் ஜெபியுங்கள்.***

உங்கள் ஜெபத்துடன் கூடிய நிதி உதவியை அனுப்பும்போது Shalom Charity Mission – என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள். மேலும் மருத்துவ தேவைகளை அறிந்துகொள்ள சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுடன் 09327445468 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது info@shalommission.in மூலமாகவும் தொடர்பு கொள்ளுங்கள்.

# ஜெபக்குறிப்புகள்

❖ முழு பீல் ஆதிவாசி மக்கள் நம் தலைமுறையில் இயேசுவை அறியவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

❖ குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் 3 மாநிலங்களிலும் திருச்சபை ஒருங்கிணைப்பு பணி நடைபெற்று வருகிறது. தேவன் ஞானம் தந்து அனைவரும் இணைந்து ஒருமனமாகச் செயல்படவும் 3 மாநில ஒருங்கிணைப்பாளர்களை தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

❖ Shalom Charity Mission மூலமாக தாங்கப்படும் 750 பீல் ஆதிவாசி மாணவர்கள் மற்றும் Compassion மூலமாக தாங்கப்படும் 605 ஷாலோம் மாணவர்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். கல்விப் பணிக்கான அதிகமான தேவைகள் ரூ. 4 இலட்சம் கிடைக்கப்பெற, இவ்வருடத்தில் மாதம் ரூ. 400 கொடுத்துத் தாங்கும் ஆதிவாசி மாணவ ஆதரவாளர்கள் 200 பேர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

❖ இவ்வருடம் 3 மாநிலங்களில் 85 கிராமங்களில் ஆலயம் கட்டப்பட தேவன் ஆதரவாளர்களை எழுப்ப, அனுமதி கிடைத்து தடையின்றி கட்டப்பட, குறிப்பாக அவசரமாக கட்டப்படவேண்டிய ஆலயங்களுக்காக ஜெபியுங்கள்.

❖ இம்மட்டும் தேவன் விதைப்பதற்காக நல்ல மழையைத் தந்தபடியால் தேவனைத் துதியுங்கள். தொடர்ந்து பயிர்கள் நன்றாக விளைய தேவையான மழையை தேவன் தரும்படியாகவும், நல்ல அறுவடை கிடைக்கவும் பாரத்துடன் ஆசீர்வதித்து ஜெபியுங்கள்.

❖ பணித்தளத்திற்கு தேவையான Media உபகரணங்கள் வீடியோ கேமரா, Audio Recording equipments (Rs.1.5 Lakhs) உடனடியாக கிடைக்கப்பெறவும், Media Department –ல் பணியாற்ற நல்ல ஊழியர் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

❖ அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் கிடைக்கப்பெறும் ஒவ்வொருவரும் வாசிக்க, ஜெபிக்க, ஊழியங்களைத் தாங்க ஜெபியுங்கள். மேலும் அனுப்பப்படுகிற ஊழிய அறிக்கைகள், நன்றிக் கடிதங்கள், ஜெப விண்ணப்பப் பதில்கள் சரிவர கிடைக்கப் பெறவும் email, SMS, website மூலம் கொடுக்கப்படும் செய்திகள் சரிவர கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள். கடிதப் பரிமாற்றங்கள் எந்தவிதத் தடையுமின்றி நடைபெற ஜெபியுங்கள்.

❖ Bishop V. Devadass, Sis. Vahitha Devadass மற்றும் பிள்ளைகள் Gladson Titus (MBA II Year) Brighton Shalom (B.Tech Media Final Year) Joy Shekinah ( Applying for Medical studies) இவர்களுக்காக ஜெபியுங்கள்.

❖ நம் ஊழியத்திற்கு மிக மிக அவசர தேவையான, ரூ. 500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக் கூடிய 1000 ஷாலோம் ஊழிய பங்காளர்கள் எழும்ப பாரத்துடன் ஜெபியுங்கள்.

# திருச்சபை பணியாளர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம்



**"அல்ஃபா இந்தியா"** என்ற உலகளாவிய ஸ்தாபனம் புதிய கிறிஸ்தவ விசுவாசிகளை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, அவர்களை சிறந்த ஆத்தும ஆதாய வீரர்களாக்க தகுந்த நடைமுறை பயிற்சிகள் அளிக்கக் கூடிய ஸ்தாபனமாகும். அகமதாபாத் நகரில் உள்ள அல்ஃபா கிளை ஒருங்கிணைப்பாளர் சகோ. ஜிம்மி, வட இந்திய திருச்சபை ஊழிய ஒருங்கிணைப்பாளர் Rev. சாமுவேல் மற்றும் Rev. அவினாஷ் அவர்களும் நமது ஷாலோம் சுதேச ஊழியர்களுக்கு பயிற்சியளிக்க தேவ சித்தத்தின்படி ஒப்புக் கொண்டார்கள்.

அதன்படி தேவனுடைய பெரிதான கிருபையினால், ஜுலை மாதம் 12,13 ஆகிய தேதிகளில் அல்பா பயிற்சி நமது ஷாலோம் பயிற்சி கூடத்தில் நடைப்பெற்றது. இதில் குஜராத் மாநிலத்திலுள்ள நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த பயிற்சியில் வேத வசனத்தை ஜனங்களுக்கு எப்படி புரிய வைப்பது என்பதைப் பற்றி தெளிவாக ஊழியர்களுக்கு விளக்கப்பட்டது. இந்த பயிற்சியில் முக்கியமாக சபையின் பிஷப் எவ்வாறு பிரசங்கம் செய்கிறார்கள் என்பதைப் பற்றி வீடியோ மூலமாக காண்பித்தார்கள். எப்படி ஒரு விசுவாசியின் பிரச்சனைகளை அறிந்து கொள்வது என்பதைப் பற்றி மிகவும் தெளிவாக செயல்படுத்தி காண்பித்தார்கள். சுவிஷேசம் மற்ற ஜனங்களுக்கு ஏன் அறிவிக்க வேண்டும்? எப்படி அறிவிக்க வேண்டும்? தனி நபருக்கு எப்படி சுவிஷேசம் அறிவிக்க வேண்டும்? மேலும் பிறரிடம் சுவிஷேசம் அறிவித்தபின் அதை அவர் புரிந்து கொண்டாரா என்பதை எப்படி அறிந்து கொள்வது? ஜனங்களின் நிலமை என்ன என்பதை தெளிவாக உணர்ந்து அறிவிக்க வேண்டும் போன்ற காரியங்கள் தெளிவாக ஊழியர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. சுவிசேஷம் நாடகம் வழியாக எப்படி அறிவிக்க வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார்கள்.

மேலும் சபையில் எப்படி பிரசங்கம் செய்ய வேண்டும், சபையில் ஜனங்களுக்கு முன்பாக எவ்வாறு புரியும்படி பிரசங்கம் செய்வது போன்றகாரியங்களும் விளக்கிக் கூறப்பட்டன. மேலும் பரிசுத்த ஆவியானவரின் உதவியை எப்படி நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்பதையும் சொல்லி கொடுத்தார்கள்.

இந்த பயிற்சி நமது தலை முறையில் முழு பீல் மக்களையும் தேவனண்டையில் திருப்பும் பணியில் விரைந்து செயல்பட சுதேச ஊழியர்கள் அனைவருக்கும் மிகவும் பிரயோஜனமாக இருந்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

# அல்பா சபை மற்றும் சபை தலைமைத்துவ பயிற்சி முகாம்

(12&13-07-2010 - ஷாலோம் பயிற்சி மையம், குஜராத்)






ஆராதனை வேளை





ஜெப வேளை





பயிற்சி வேளை




ஆல்பா பயிற்சியில் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட 80 சுதேச ஊழியர்கள் மற்றும் ஷாலோம் போதகர்கள்.

# ஷாலோம் 20வது வருட ஸ்தோத்திர கூடுகை

(தாகோத் – 03.07.2010)






பாடல் மற்றும் ஆராதனை வேளை




Rt. Rev. Dr.V. தேவதாஸ் அவர்களுக்கு வாழ்த்துக்கள்




Rev. மகேந்திர கட்டாரா அவர்களுக்கு வாழ்த்துக்கள்





சொந்த பீல் ஜனங்கள் இரட்சிக்கப்பட அர்ப்பணிப்பின் ஜெபம்






பீல் மக்களைக் குறித்து Rev. மகேந்திர கட்டாரா அவர்கள் எழுதிய புத்தகம் வெளியீடு

நமது பணித்தளத்தில் நடைபெற்ற

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

(ஷாலோம் திருச்சபை, நகரேலா, குஜராத் – 18.04.2010)

பிரதிஷ்டை செய்யப்பட்ட சுதேச ஊழியர் : **பத்தியா கராடியா**




ஊழியர் பிரதிஷ்டை செய்யப்படுகிறார்




ஊழியருக்காக ஜெபிக்கும் Pr. வில்சன் சங்காடா

தேவன் தந்த தரிசனத்தின்படி பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் கடந்த **19** வருடங்களில் சுமார் **500** பீல் சுதேச ஊழியர்களை உருவாக்கவும், **500**க்கும் அதிகமான திருச்சபைகளை ஸ்தாபிக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். தேவனுக்கே மகிமை!

உருவாக்கப்பட்ட இளம் திருச்சபை மக்களுக்கு தங்களது சொந்த ஜனம் இரட்சிக்கப்பட ஜெபிப்பதற்கும், ஆத்தும ஆதாயம் செய்வதற்கும், தியாகமான காணிக்கைகளை கொடுப்பதற்கும் கற்றுக் கொடுத்து வருகிறோம். ஆவியானவரும் இந்த காரியங்களில் அதிகமாய் உதவிசெய்து தம் சித்தத்தை நிறைவேற்றி வருகிறார். இதுவரை தமிழ்நாட்டில் உள்ள சபைகள் மூலமாக நம்முடைய **450** சுதேச ஊழியர்கள் ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்பட்டு தாங்கப்பட்டு வருகிறார்கள். மத்தியபிரதேசத்தில் திருடர்கள் நிறைந்த பகுதியில் நம் ஊழியங்கள் விரிவடைந்து வருகிறது, அங்கு நம் சுதேச ஊழியர் சகோ. மங்கள்சிங் மூலமாக ஜாபுவாமாவட்டம் மகுடி என்ற கிராமத்தில் சில குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக் கொண்டுள்ளன. அவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய சகோ. பத்தியா கராடியா குடும்பமாய் அர்ப்பணித்துள்ளார். இந்த சுதேச ஊழியரை குஜராத்திலுள்ள நகரேலா கிராம சபையார் ஜெபித்து தாங்க முன் வந்தனர். இதையடுத்து இந்த ஊழியர் ஒரு மாத ஊழிய பயிற்சியை முடித்தார்.

அதன்பின் **18.04.12010** ஞாயிற்றுகிழமை குஜராத், நகரேலா கிராம சபையில நடைபெற்ற ஆராதனையில் அந்த சபை போதகர் Rev. வில்சன் சங்காடா அவர்கள் தலைமையில் சகோ. பத்தியா கராடியா குடும்பமாய் பிரதிஷ்டை செய்யப்பட்டார். Rev. வில்சன் சங்காடா அவர்கள் குடும்பம், **1994**ம் ஆண்டு முதல் நாசரேத் Margoschis College ஜெப ஐக்கியத்தின் மூலமாக Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள் தலைமையில் தாங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த ஆராதனையில் அநேகர் பங்கு பெற்றார்கள். சுதேச ஊழியர் தனது சாட்சியை பகிர்ந்து கொண்டார். நமது ஷாலோம் திருமண்டலத்தின் பேராயர் Rt. Rev. Dr.V. Devadass அவர்கள் மிஷனெரி செய்தியை கொடுத்தார்கள். சுதேச ஊழியருக்கு புதிய வேதப்புத்தகம், மற்றும் அவரது குடும்பத்தில் அனைவருக்கும் புத்தாடைகள் வழங்கப்பட்டன. மேலும் சபையார் வெகுமதிகள் கொடுத்தனர். மேலும் மாதந்தோறும் ஜெபிக்கவும், மிஷனெரி ஆதரவுத் தொகை கொடுக்கவும் முன் வந்துள்ளார்கள். ஆராதனை நிறைபெற்றபின் சபையில் அனைவருக்கும் விருந்து அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலும் இரண்டு ஷாலோம் திருச்சபையார் குஜராத்திலும், மூன்று ஷாலோம் திருச்சபைகள் மத்தியபிரதேசத்திலும் இருந்து இராஜஸ்தான் மாநில பீல் சுதேச ஊழியங்களை ஜெபித்துத் தாங்க முன் வந்துள்ளார்கள்.

# ஒளிரும் நட்சத்திரங்கள்

நமது ஷாலோம் கல்விப் பணியின் மூலம் கல்விப் பயின்ற பீல் ஆதிவாசி சிறுவர்களில் 10ம் மற்றும் 12ம் வகுப்புகளில் 70 சதவீதத்திற்க அதிகமான மதிப்பெண்கள் பெற்றுள் மாணவ மாணவிகளில் ஒருசிலர்....



மஞ்சுளா, ஹடுமத்
+2 / 72%



மணிஷா, சிமளியா
+2 / 71%



மணிஷா G., புரக்குவா
+2 / 70%



சோனல், சிமளியா
+2 / 71%



ரூத்பேன், வாங்கோல்
+2 / 70%



ஷர்மிஸ்டா, கத்துவாரா
+2 / 71%



மோகன், புரக்குவா
+2 / 74%



தீபக், கத்துவாரா
+2 / 70%



அமீத், கத்துவாரா
10 / 70%



உஷா, ஹிரோலா
10 / 72%



பிரித்திகா, தெல்சர்
10 / 74%



ரஷிலா, பாடலா
10 / 71%

கல்வி பணியின் மூலம்

# ஒளிரும் நட்சத்திரங்கள்

(SHALOM CHARITY MISSION)

நம் ஷாலோம் ஊழியங்கள் மூலமாக இதுவரை சுமார் 1350 ஆதிவாசி பிள்ளைகள் ஜெபித்து தாங்கப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக இவர்கள் நம் ஊழியர்கள் மற்றும் மூப்பர்களின் பிள்ளைகளாவார்கள். கிராமங்களில் படிப்புவசதி, சாலைவசதி, மின்சாரவசதி, ஏதுமில்லாதபடியால் 8வது, 10வது, 12வது வகுப்பு படிப்பவர்கள் மிகக் குறைவாக படித்தாலும் தேர்ச்சி அடைவது அரிது. ஒருவேளை சொற்பமான மதிப்பெண்கள் தான் எடுப்பார்கள். ஆகவே அரசாங்கத்தின் மூலம் கொடுக்கப்படும் Reservation Quota விற்கு தேவையான Merit இல்லாதபடியால் முன்னேற முடியாமல் இருக்கிறார்கள்.

வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாமலும், கல்வி அறிவு சுத்தமாக இல்லாமலும், வாழ்ந்து வந்த பீல் மக்களின் பிள்ளைகள் இன்று ஷாலோம் ஊழியத்தின் மூலமாக கடந்த பத்து ஆண்டுகளில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதின் நிமித்தமாக, தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தைக் கொடுத்து, 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வுகளில் 70% க்கும் அதிகமான மதிப்பெண்களைக் கொடுத்து ஆசீர்வதித்திருப்பது, தேவ மகிமைக்கு ஏதுவாயிருக்கிறது. இனி வரும் ஆண்டுகளில் இதைவிட 80% –90% கிடைக்கப் பெற ஜெபித்து பிரயாசப்படுகிறோம். இளம் தலைமுறை அனைத்துத் துறையிலும் சிறந்து விளங்கி தங்கள் சொந்த பீல் சமுதாயத்தை ஆசீர்வதிக்க வேண்டும். குறைந்தது 10,000 ஆதிவாசி மாணவர்களை படித்து முன்னேற வைப்பது எங்கள் பாரமாகும். நீங்களும் உடனடியாக சில ஆதிவாசி மாணவர்களை தாங்க (மாதம் ரூ. 400/- கொடுத்து) முன்வாருங்கள். 10 நாட்களில் உங்களுக்கு மாணவரின் புகைப்படம், Bio data அனுப்பி வைப்போம். உடனடியாக 200 ஆதிவாசி மாணவர்களின் ஆதரவாளர்கள் தேவை. “நிதி உதவி செய்யும் போது “SHALOM CHARITY MISSION” என்ற பெயருக்கு M.O., Cheque or D.D அனுப்ப அன்பாய்க் கேட்டு கொள்ளுகிறோம். வங்கி கணக்கு : **SHALOM CHARITY MISSION**

**Axis** வங்கி கணக்கு எண் : **105010100096779 - Tuticorin Branch**

**TMB** வங்கி கணக்கு எண் : **174100710400061 - Tuticorin Branch**

***“சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்;”( மத்தேயு 19:13 )***

மேலும் அதிக மதிப்பெண்கள் எடுத்த ஒரு சில மாணவர்களின் சாட்சி மற்றும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளோம்.

## மாணவர்களின் சாட்சிகள்

**1. மஞ்சுளா பேன் பரத்பாய் சாரேல் – ஹடுமத்.**

ஷாலோம் மிஷன் மூலமாக +2 படிக்க தேவன் கிருபை தந்தார். எனது கிராமத்தில் சுமார் 10 பேர்கள் +2 பரீட்சை எழுதினார்கள். Shalom Students Prayer Meeting மூலமாக, என் படிப்பை தேவன் ஆசீர்வதித்து 72% மதிப்பெண்கள் கிடைக்க கிருபை தந்தார். English, Maths பாடங்களை சிரமத்துடன் படித்தேன் 92% கிடைக்க தேவன் உதவி செய்தார். நான் Teacher training படிக்க விரும்புகிறேன். ஷாலோம் மூலமாக தாங்குவோருக்கு என் நன்றி.

**2. மனிஷாபேன் S. டாமோர் – சிமளியா.**

நான் +2 வரை படிக்க தேவன் உதவினார். என்னுடைய வகுப்பில் நான் நன்றாக படித்தேன். அப்போது நடைபெற்ற மாணவர்களுக்கான ஜெபக்கூடுகை ஆசீர்வாதமாக இருந்தது.

நான் +2–வில் 71% மதிப்பெண்கள் பெறுவதற்கு தேவன் கிருபை பாராட்டினார். நான் **Nursing Course** படிக்க மிகவும் ஆவலாய் உள்ளேன். **Sis.** வஹிதா தேவதாஸ் அவர்களுக்காகவும், ஷாலோம் மிஷனெரி மூலமாக தாங்குவோருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறேன்.

**தாங்குவோர் :** Mr. Jeyanth Thomas , தூத்துக்குடி

**3. மனிஷா பேன் ஜீ. டாமோர் – புரக்குவா**

எனது கிராமத்தில் 4 பிள்ளைகள் தான் +2 பரீட்சை எழுதினோம். எனக்கு நல்ல மதிப்பெண்கள் 70% கிடைக்க தேவன் கிருபை தந்தார். Science பாடம் கடினமாக இருந்தது. நான் மாணவர் ஜெபக் கூடுகையில் பங்கு பெற்றேன். தேவன் நல்ல மதிப்பெண்கள் தந்து ஆசீர்வதித்தார். நீங்கள் எல்லோரும் Nursing training -ல் சேர எனக்காக ஜெபியுங்கள். தாங்கிய குடும்பத்திற்கும், ஷாலோம் மிஷனெரி இயக்கத்திற்கு தேவ நாமத்தில் நன்றி.

**தாங்குவோர் :** திரு. இன்பராஜ், கோவை.

**4. சோனல் பேன் டி. டாமோர் – சிமளியா.**

ஷாலோம் மிஷன் மூலமாக, 12 வரை படிக்க தேவன் கிருபை தந்தார். கர்த்தர் என் படிப்பை பார்த்தும் என் ஜெபத்தை கேட்டும் எனக்கு 71% மதிப்பெண்கள் பெறக் கிருபை தந்தார். நான் Nursing Course படித்து சேவை செய்ய விரும்புகிறேன்.

**தாங்குவோர் :** இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி.

**5. ரூத்பேன் ரம்சுபாய் டாமோர் – வாங்கோல்,**

ஷாலோம் மிஷன் மூலமாக, நான் +2 வரை படிக்க தேவன் கிருபை தந்தார். பின்னர் நான் மாணவர் ஜெபக் கூடுகையில் பங்கு பெற்றேன். தேவன் என் முயற்சிகளை ஆசீர்வதித்தார். **Sis.** வஹிதா தேவதாஸ் அவர்கள் செய்தியளித்து ஜெபித்தார்கள். எங்கள் ஊரில் 6 பேர்கள் தான் +2 பரீட்சை எழுதினார்கள். அனைவரைக் காட்டிலும் நான் சிறப்பான மதிப்பெண்கள், அதாவது 70% மதிப்பெண்கள் எடுக்க தேவன் கிருபை தந்தார். "நர்ஸ்" ஆகி பணிபுரிய விரும்புகிறேன். இடம் கிடைக்க ஜெபியுங்கள்.

**தாங்குவோர்:** திரு. ஷாந்தினி ராபர்ட், தூத்துக்குடி.

**6. ஷர்மிஷ்டா எஸ். ஹட்டிலா : கிராமம் கத்துவாரா,**

கடந்த ஆண்டில் நான் +2 வரை முடிக்க தேவன் கிருபை தந்தார். நான் முதல் வகுப்பில் இருந்து ஷாலோம் ஊழியங்களின் மூலமாக, கோத்ரா வில் உள்ள Methodist School Hostel – இல் தங்கிப் படித்தேன். ஷாலோம் மிஷன் மூலமாக தாங்கிய ஆதரவாளர்களுக்கும் என் நன்றி. மேலும் தேவனுக்கு சாட்சியாக பணிபுரியவும், ஷாலோம் ஊழியங்களைத் தாங்கவும் தீர்மானித்துள்ளேன். எனக்காக ஜெபியுங்கள்.

**தாங்குவோர் :** Annie Robinson , Coimbatore.

**7. மோகன்பாய் ஜீ டாமோர் – புரக்குவா**

ஷாலோம் மிஷன் மூலமாக +2 வரை நன்கு படிக்க தேவன் கிருபை தந்துள்ளார். Shalom Students Prayer Meeting –ல் சகோதரி வஹிதா எங்களுக்காக ஜெபித்தார்கள். தேவன் நான் 74% மதிப்பெண்கள் பெற கிருபை தந்தார். நான் ஆசிரியர் பயிற்சிப் படிப்பிற்குச் செல்ல தேவன் கிருபை தந்துள்ளார். என் பீல் மக்கள் மத்தியில் ஆசிரியராகப் பணியாற்றுவேன். எனக்காக வழி நடத்துகின்ற ஷாலோம் மிஷன் மற்றும் தாங்குவோருக்கு மிக்க நன்றி. தேவனுக்கே மகிமை.

**தாங்குவோர் :** மகிமையின் இயசே மாறாதவர், ஆறுமுகநேரி

**8. தீபக் எஸ். ஹட்டிலா – கத்துவாரா**

தேவ கிருபையால் நான் +2 வரை படிப்பை முடிக்க தேவன் கிருபை தந்தார். நான் **B.A** படித்து **L.L.B** படிக்க ஆசைப்படுகிறேன். எங்கள் பீல் மக்களுக்கு நல்ல **Advocate**-ஆக சேவை செய்ய விரும்புகிறேன். ஷாலோம் மிஷனுக்காவும், தாங்கி வருகிற ஆதரவாளருக்காகவும் தேவனைத் துதிக்கிறேன். எனக்காக ஜெபியுங்கள்.

**தாங்குவோர்** : திரு. விஜய், ஆறுமுகநேரி.

**9. அமித் எஸ். ஹட்டிலா; கிராமம் கத்துவாரா,**

தேவ கிருபையால் 10ம் வகுப்பு பரிட்சை நன்றாக எழுத தேவன் கிருபை தந்தார். English & Maths கடினமாக இருந்தாலும் தேவன் நன்றாக எழுத கிருபை செய்தார். மேலும் நான் Doctor ஆகி, என் சொந்த ஜனங்களுக்கு சேவை புரிய வாஞ்சிக்கிறேன். எனக்கான ஜெபியுங்கள். தாங்குவோருக்கு மிக்க நன்றி. தேவனுக்கே மகிமை.

**தாங்குவோர்** : ஜே. பி. ராஜா ஸ்டோர் – சென்னை.

**10. உஷா A. கணவா ; கிராமம் ஹிரோலா,**

கடந்த ஆண்டு +2 வரை முடிக்க தேவன் கிருபை தந்தார். நான் நல்ல மதிப்பெண்கள் பெற தேவன் கிருபை தந்தார். ஷாலோம் மிஷனுக்காக, சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் ஒழுங்கு செய்த ஜெபக் கூடுகைக்காக தேவனை துதித்து நன்றி கூறுகிறேன். என்னைத் தாங்கும் குடும்பத்திற்காக தேவனுக்கே மகிமை.

**தாங்குவோர்** : திரு. கிறிஸ்டோபர் டேவிட், கோவை.

**11. பிரித்திக்கா பேன் என். பில்வாள் – தெல்சர்**


ஷாலோம் மிஷன் மூலமாக, 10 வது வரை படிக்க தேவன் கிருபை தந்தார். என் கிராமத்தில் ஒரு சிலர்தான் 10ம் வகுப்பு பரீட்சை எழுதினார்கள். நான் நன்கு படிக்கும்படியாக, மாணவர் ஜெபக் கூடுகையில் பங்கு பெற்று ஜெபிக்க தேவன் எனக்கு கிருபை தந்தார். தேவ கிருபையால் 74% மதிப்பெண்கள் பெற்றேன். B.Sc Nursing படித்து என் ஏழை பீல் மக்களுக்கும் சேவை செய்ய காத்திருக்கிறேன். எனக்காக ஜெபித்துத் தாங்குகின்ற குடும்பத்திற்காக தேவனைத் துதிக்கிறேன்.

**தாங்குவோர்** : திருமதி. மேரி எஸ்தர் ரூபன், கோவை.

**11. ரசிலா பேன் எஸ். பாரியா ; கிராமம் பாடலா,**

நான் +10 படித்து தேர்ச்சி பெற தேவன் கிருபை தந்தார். English & Maths பாடங்களில் மிகவும் கஷ்டப்பட்டேன். அதன் காரணமாக நான் Tuition –ல் சேர்ந்து படித்தேன். Shalom Students Prayer Meeting மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. நல்ல முறையில் 71% மதிப்பெண்கள் பெற தேவன் கிருபை தந்தார். மேலும், நான் நன்றாக மேல் படிப்பு படித்து முடித்து, பிறருக்கு ஆசீர்வாதமாகக் காணப்பட எனக்காக ஜெபியுங்கள்.

**தாங்குவோர்:** திருமதி. மெட்டில்டா, தூத்துக்குடி.



பிரியமானவர்களே, பாளையங்கோட்டையைச் சேர்ந்த Prof. C.S. கிறிஸ்டோபர் மற்றும் Dr. பிரேமா கிறிஸ்டோபர் தம்பதியார், முழு குடும்பமாக நமது ஷாலோம் ஊழியங்களின் துவக்கம் முதல் உறுதுணையாக இருந்து ஜெபித்து, தாங்கி வருகிறார்கள். மேலும் Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள் நமது இயக்கத்தில் Board Member –ஆகவும், Dr. பிரேமா கிறிஸ்டோபர் அவர்கள் Shalom Charity Mission –ல் Trustee –ஆக செயல்பட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள் நமது இயக்கத்தைக் குறித்தும், Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களது குடும்ப வாழ்க்கைக் குறித்தும் எழுதிய ஒரு கட்டுரையை இந்த இதழில் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்...

## *ஷாலோமில் உச்சிதமான கற்கள்*

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர, சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கு என் வாழ்த்துதலைக் கூறுகிறேன். ஷாலோம் ஊழியங்களை (அன்பு பகிர்வு இயக்கம்) தேவனாகிய கர்த்தர் 20 ஆண்டுகள் ஜெபத்துடன் வழிநடத்தினபடியால் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன். அவ்வியக்கத்தில், அதில் பணிபுரிகிறவர்களையும் பங்காளர்களையும் வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்சசியடைகிறேன். கர்த்தர் ஷாலோமை உச்சிதமான கற்களினால் (ஏசா. 54:12) அலங்கரித்ததற்காக ஸ்தோத்திரம்

### *கோமேதகக்கற்கள்*

ஷாலோம் வரலாற்றில் 2009 நவம்பர் 20ஆம் நாள் மிகவும் மகத்தான நாள். அன்று ஷாலோம் ஒரு டையோசிசனாக உருவாக்கப்பட்டு சகோதரர் தேவதாஸ் அவர்களை முதல் பிஷப் ஆக உருவாக்கி கர்த்தரின் கோமேதகக்கல்லாய் பதிக்கப்பட்ட கர்த்தருடைய மகிமையை வெளிப்படுத்திய நாள். மேலும் 77 பீல் ஜாதி மிஷனெரிகளை போதகர்களாக அபிஷேகம் செய்து கர்த்தரின் இரத்தினக் கற்களாய் பதிக்கப்பட்டு கர்த்தரின் மகத்துவத்தைப் பிரகாசிக்கச் செய்த நாள். அந்த நாளில் அடியேனை பங்கு பெறச் செய்து கர்த்தருடைய மகிமையை ருசிக்க கிருபை செய்ததற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். தேவனாகிய கர்த்தர் தாமே ஷாலோம் ஊழியங்களையும், பிஷப் தேவதாஸ் அவர்களையும், 77 போதகப் பிதாக்களையும் விஷேச அபிஷேகத்தினால் அபிஷேகித்து தேவசித்தத்தை நிறைவேற்ற வாழ்த்துகிறேன்.

### *மாணிக்கக் கற்கள்*

ஷாலோம் ஊழியங்களிலே தேவனாகிய கர்த்தர் அடுத்த மைல் கல்லை கடக்கச் செய்து அவருடைய கற்களால் அலங்கரித்ததற்காய் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். 20 ஆண்டு ஊழியப்பணியில் 08.06.2010அன்று அலகாபாத் பைபிள் செமினரி மூலமாய் படிப்பறிவில்லாத, பீல் மக்களிடமிருந்து 90 பேரை கர்த்தர் தெரிந்தெடுத்து நான்கு வருட வேதாகமப்படிப்பை படிக்கச் செய்ததற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அவர்களில் 55 ஊழியர்கள் பட்டம்

பெற்று கர்த்தருடைய பணியைச் செய்ய மாணிக்கக் கற்களாய் பதித்து (ஏசா. 54:12) பிரகாசிக்கச் செய்ததற்காய் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

*வச்சிரக்கல்*

1994ஆம் ஆண்டு நாசரேத் மர்காஷிஸ் கல்லூரி பேராசிரியர்கள் மூலமாக பீல் ஜாதி குடிமகனான சகோ. வில்சன்பாய் அவர்களை ஷாலோமின் மிஷனெரியாகத் தாங்க கிருபை செய்தார். அப்பொழுது அவரிடம் நான் உங்களை நாங்கள் தாங்குவதற்குக் காரணம் பீல் ஜாதி மக்களை இயேசுவின் அன்பில் கொண்டுவருவதற்குத்தான். சில ஆண்டுகளில் உங்கள் மக்களே உங்களைத் தாங்க வேண்டும். நீங்களும் உங்கள் சபையும் அடுத்து பீல் ஜாதி மிஷனெரியை முழுமையாய்த் தாங்கி தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்ட வேண்டும் என்றேன். அவ்வாறு குஜராத் மாநிலத்தில் நகரேலா கிராமத்தில் மிஷனெரியாக ஊழியம் செய்து வரும் போதகர். வில்சன் சங்காடா, மத்தியப்பிரதேசத்தில் மகுடி என்ற கிராமத்தில் பீல் ஜாதி மக்களின் மிஷனெரியாக சகோ. பத்தியா கராடியா—வை மிஷனெரியாக அபிஷேகம் செய்து தாங்கியதைக் குறித்துக் கேள்விப்பட்டு தேவனுக்கு மிகுந்த நன்றி செலுத்துகிறேன். சகோ. வில்சனை கர்த்தர் ஷாலோமில் வச்சிரக்கல்லாய் பதித்து (வெளி. 21:19), பீல் ஜாதி மக்கள் தங்கள் மிஷனெரிகளைத் தாங்களே தாங்கவும், மற்ற பீல்ஜாதி மிஷனெரிகளை உருவாக்கித் தாங்கவும் பிரகாசிக்கச் செய்ததற்காய் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

*கோமேதகக்கற்கள்*

“ஏபோத்திலும், மார்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகக்கற்களும், இரத்தினங்களுமே, அவர்கள் நடுவில் நான் வாசம் பண்ண எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக” (யாத். 25:7,8) என்ற வார்த்தையின்படி சகோ. தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களை கர்த்தர் இணைத்து, 25 ஆண்டுகள் தேவப்பணியைச் செய்ய கிருபை செய்ததற்காய் ஸ்தோத்திரம். இருவரும் முதல் ஐந்து ஆண்டுகள் IMS —ல் பணிபுரிய தேவன் கிருபை செய்தார். பின்பு கர்த்தர் தரிசனங்களைத் தந்து ஷாலோம் மிஷனெரி ஊழியத்தை ஆரம்பித்து 20 ஆண்டுகள் அவர் சித்தத்தின்படி அவர் திட்டத்தை அவர்கள் மூலமாக நிறைவேற்ற தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிக்கிறேன். தன்னுடைய மூன்றாவது பிள்ளையை பீல் ஜாதி மக்கள் மத்தியில் விதைத்து, பல இன்னல்களைக் கடந்து 452 பீல் சுதேச மிஷனெரிகளை உருவாக்கியதற்காய் தேவனை ஸ்தோத்தரிகிறேன்.

தேவன் அவர்களுக்கு தந்திருக்கிற மூன்று பிள்ளைகளையும் **(டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா)** வைடூரிய கற்களாய் பிரகாசிக்க கிருபை செய்வாராக. கர்த்தர் இவர்களை இணைத்து 25 ஆண்டுகளாக உபத்திரவங்களைக் கடந்து வெற்றி தந்ததற்காய் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இன்னும் பல ஆண்டுகள் அவர் பணி செய்ய கர்த்தர் அபிஷேகத்தையும், நல்ல ஆரோக்கியத்தையும், தந்து வழி நடத்த வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
**Prof. C.S. கிறிஸ்டோபர்**

## *தாகோத் - பஞ்ச் மஹால் மாவட்டங்களில் திருச்சபை வளர்ச்சி*

### - புத்தக வெளியீடு




Rev. மஹேந்திரபாய் கட்டாரா அவர்கள் 1970ஆம் ஆண்டு அவர்கள் சொந்த கிராமமான ஜெசவாடாவிலிருந்து தினமும் படிப்பதற்காக 12 கி.மீ தொலைவிலுள்ள தாகோத் பட்டணத்திற்கு வரும் வேளையில் Rev. H.P. Chromie அவர்கள் மூலமாக தேவனை அறிந்து ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார். EU ஸ்தாபனத்தின் மூலமாக கிறிஸ்துவின் அன்பில் வேரூன்றி ஆத்துமாக்கள் மீது பாரங்கொண்டு ஊழியமும் செய்பவர். மிஷனெரி பணியின் மீது அன்பும், பாசமும், பாரமும் கொண்டு ஒவ்வொரு ஸ்தாபனமும் தன் சொந்த பீல் மக்கள் தேவனை அறியவேண்டும் என்று முடிந்த உதவிகளையும், ஜெபித்து உற்சாகப் படுத்தும் தேவ மனிதர். சாக்கலியா என்ற ஊரில் உள்ள உயர்ந்தப் பள்ளிக்கு Principal ஆக இருந்துக்கொண்டு அநேகரை ஆண்டவரண்டை நடத்தியவர். 1985–ம் ஆண்டு நாங்கள் இந்திய மிஷனெரி சங்கத்தின் மூலமாக துதியா பணித்தளம் வந்த நாள் முதல் எங்களை நேசித்து உபசரிப்பார்கள். உற்சாகப்படுத்துவார்கள், முடிந்த உதவிகளையும் செய்வார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு மரண படுக்கையிலிருந்த இவரை தேவன் புது உயிர் தந்து எழுப்பினார். அவர்கள் தாகோத் பஞ்ச் மஹால் மாவட்டங்களில் 1890 –ம் ஆண்டு முதல் மிஷனெரிகள் எப்படி, எந்த வசதிகளும் இல்லாமல் பாடுபட்டு ஊழியங்களை செய்து, சபைகளை உருவாக்கினார்கள் என்பதையும், பீல் மக்களைக் குறித்தும் அழகாவும், நேர்த்தியாகவும் ஒரு புத்தகம் எழுதி, ஷாலோம் ஊழியத்தின் 20 ம் ஆண்டில் அடியெடுத்து வைத்த நாளான 03–07–2010 அன்று நடைபெற்ற தோத்திர கூடுகையில் வெளியிட தேவன் கிருபை செய்தார். அதனை Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள் குடும்பமாக ஜெபித்து பிரதிஷ்டை செய்து வெளியிட, முதல் பிரதியை Rev. மஹேந்திரபாய் கட்டாரா அவர்களின் அன்பு மனைவி **பிரபுல் பேன்** அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். இவ்வைபவத்தில் CNI போதகர் Rev. Dr. Hemilton Roy மற்றும் சபை மூப்பர்களும் பங்கு பெற்றார்கள். இப்புத்தகத்தில் 1850–1968 வரை ஊழியம் செய்ய வெளிநாட்டு மிஷனெரி ஸ்தாபனங்களின் பணிகளுக்கு பின்பு 1985 ம் ஆண்டு முதல் இந்திய மிஷனெரிகளாய் தேவதாஸ் அவர்கள் குடும்பம் IMS மூலமாக அனுப்பப்பட்டு அதை தொடர்ந்து 1991 ம் ஷாலோம் ஊழியங்கள் மூலமாக 500க்கு அதிகமான பீல் சுதேச ஊழியர்களும் 540 சபைகள் உருவாக்கப்பட்ட ஆவியானவரின் நடபடிகள் அழகாக விவரித்து எழுதியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள். ரோமர் 10:15.**

<u>குறிப்பு:</u> 10–07–10 சனிக்கிழமை அன்று திருமதி பிரபுல் பேன் மஹேந்திரபாய் கட்டாரா அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்கள். சகோ. மஹேந்திரபாய் கட்டாரா அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும் தேவன் ஆறுதலை கட்டளையிட ஜெபியுங்கள்.

# வளமிக்க பாரதம்



நமது பாரத தேசம் அனைத்து வளங்களும் பெற்ற தேசமாகும். இயற்கை வளம் என்று எடுத்துக் கொண்டால், மலைகள், பசுமை நிறைந்த காடுகள், வற்றாத ஜீவ நதிகள் இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். கடல்வளம், நமக்கு



கிடைத்த இறைவனின் கொடையாகும். நமது தேசத்தின் மண்ணில் புதைந்து கிடக்கும் கனிமங்களின் வளம் நம் பாரதத்தை முதல் நிலைக்குக் கொண்டு வருகிறது. சமீபத்திலே தமிழகத்தில், நாமக்கல் மாவட்டத்தில் பிளாட்டினம் பாறைகள் (தங்கத்தை விட பன்மடங்கு விலை உயர்ந்தது) மண்ணிற்குள் புதைந்து கிடப்பதாக புவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதை வெளிக் கொண்டு வந்தால் இந்தியா பணக்கார நாடாக மாறும். எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள் வளம் நிறைந்த தேசம் நம் தேசம். (120 கோடி மக்கள்) சீனா நம் தேசத்தின் மீது போர் தொடுத்தபோது சீனாவைப் பார்த்து நமது தேசத்தின் மக்கள் தொகை பெருக்கத்தைக் குறித்து கிண்டலாக ஒரு ஜப்பான் நாட்டு அதிகாரி "எதற்காக இந்தியாவுடன் சண்டை போட வேண்டும். இந்தியா தன் மூன்று திசைகளிலும் கடல் சூழ்ந்த நாடு, அது கடல் நீரில் மிதந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு 10 வருடங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள், இந்தியாவின் மக்கள் பெருக்கம் பல மடங்காகும் பழு தாங்கமுடியாமல் தானாகவே கடலில் மூழ்கிவிடும் என்று கூறினார். ஆனால் அது ஓரளவு உண்மைதான்.

மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக எத்தனை உயர்ந்த திட்டங்கள் வந்தாலும் பற்றாக்குறைதான் ஏற்படுகிறது. நமது தேசத்தில் நிறைந்துள்ள வளங்களால் மக்கள் தொகை மட்டும் அமெரிக்கா போன்று குறைவாயிருக்குமேயானால் உலகிலேயே முதல் வல்லரசு நாடாக என்றோ மாறியிருக்கும். நமது பாரத மண்ணில் அறிஞர்களுக்கும், அறிவியல் வல்லுனர்களுக்கும் பஞ்சமில்லை. செல்வந்தர்களுக்கும், தலைவர்களுக்கும் குறைவில்லை எந்த துறையிலும் வல்லுனர்கள் நிறைந்த நாடு நம் நாடு.

எல்லாவற்றிற்றும் மேலாக நம் தேச மக்களின் இறை பக்தியும், பண்பு நிலைகளும் போற்றுதற்குறியது. 120 கோடி மக்களுக்கு நம் தேசத்தில் அமைந்துள்ள விக்கிரகங்களின் எண்ணிக்கை மக்கள் தொகையையும் தாண்டிவிடும். உண்மை தெய்வத்தை அறியமுடியாதபடி சத்துருவாகிய சாத்தான் மக்களின் மனக்கண்களை குருடாக்கி மகிழ்கின்றான். இதற்கு உறுதுணையாயிருப்பது மந்திரவாதிகள், புரோகிதர்கள், உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் அறிவிலர்கள். மக்களின் கண்கள் திறக்கப்பட கிறிஸ்துவின் சுவிசேஷம் அனைத்து இந்தியருக்கும் போய்ச் சேரவேண்டும். விசுவாசிகள்

விழிப்புடன் செயல்படவேண்டும்.

நமது ஷாலோம் ஊழியங்கள் மூலமாக பீல் என்ற ஒரு இன மக்களை கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்க கடந்த 19 ஆண்டுகளின் கடுமையான பிரயாசத்தினால் ஒரு கோடி மக்கள் தொகை கொண்ட பீல் மக்களில் 1¼ லட்சம் மக்கள் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்துள்ளனர். இன்னும் 10 ஆண்டிற்குள்ளாக அனைத்து பீல் மக்களும் இரட்சிப்படைய இலக்கு வைத்து ஷாலோம் ஊழியம் தொடர்கிறது.


ஆவியின் உயர்ந்த அனுபவங்கள் பெறுவதற்காகவும், உடல் சுகமும், உலக செல்வமும் நிறைவாக பெற்றுக் கொள்ளவும் இன்றைய விசுவாசிகள் விரயம் செய்யும் பணமும், நேரமும் சில மாய்மால சுவிசேஷர்களைக் கொழுக்க வைக்கிறது. இந்த மயக்கத்திலிருந்து சுவிசேஷர்களும், தன்னார்வ ஊழியர்களும், விசுவாசிகளும் எழுந்து செயல்பட்டால், வரும் 10 ஆண்டுகளுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் குறைந்தது 50 பேரை இயேசுவிடம் நடத்தினால் பரலோகம் இந்தியர்களால் நிறைந்து வழியும், மேலும் ஊழல் பெருச்சாளிகள், வன்முறைக் கூட்டங்கள், ஜாதி மத வேற்றுமைகள் முற்றிலும் ஒழிந்து போம். இந்தியர் அனைவரும் சகோதர பாசத்தோடும், வறுமை, நோய் போன்ற அரக்கர்களை வென்றவர்களாக தலை நிமிர்ந்து நடக்க முடியும். 1 லட்சம் கோடிக்கும் மேல் சொத்தை சம்பாதித்த அநேக செல்வந்தர்கள் இயேசுவின் புத்திரர்களாய் மாறி விட்டால், அப்போஸ்தலர்கள் காலத்தில் நடந்தது போல அனைத்து செல்வங்களையும் பொதுவாக வைத்து அனுபவிக்கும் இனிய காலம் மலர்ந்துவிடும். இந்த கனவு நினைவாக இன்றே தூசியை உதறிவிட்டு சுவிஷேசம் அறிவிக்கப் புறப்படுங்கள். பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளுங்கள். உணர்ச்சிவசப்பட்டு எந்த ஆவிக்குரிய அனுபவத்திற்கும் இடம் கொடாமல் உணர்வுள்ள தெய்வப் பிள்ளைகளாய் புத்தியாய் நடந்து கொள்ளுங்கள். ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுகிறவர்கள் இருப்பது நிச்சயம். இயேசு ஒருவரையே மாதிரியாகக் கொள்ளுங்கள், முழங்கால்களைக் காய்ப்பேற்றுங்கள். அப்பொழுது ஏசாயா தீர்க்கன் முன் அறிவித்தது போல நம் தேசம் "பியூலா" என்று அழைக்கப்படும். (தெருவில் திரிந்தலையும், தீனானாக அல்ல) கிறிஸ்துவுக்கு வாழ்க்கைப்பட்ட பியூலா என்று சொல்லப்படும். நாமும் எப்சிபா என்று அழைக்கப்பட்டு, கர்த்தருக்கு மிகவும் பிரியமானவர்களாய் மாறுவோம். சில ஆண்டுகளுக்கு முன் கர்த்தர் எனக்குத் தந்த பாடல் ஒன்று என் நினைவிற்கு வருகிறது.

இந்தியா எங்கள் தாயகமே
இறைவன் விரும்பும் பாரதமே
ஆன்மீக விடுதலை அடைந்திடவே
அன்பராம் இயேசுவை கொடுத்திடுவோம்

***வாழ்க நம் பாரதம்! வளர்க நமது ஆத்தும தாகமும் வேட்டையும்***

என்றும் இரட்சகரின் பணியில்
***Bro. J. அற்புதராஜ் மர்காஷிஸ்***

# Dr. ஏர்னஸ்ட் பேட்டன்



மிஷனெரி முன்னோடிகள்

**Dr. ஏர்னஸ்ட் பேட்டன்** (Dr. Ernest Paton) **1981**ம் ஆண்டு ஜுலை மாதம் ஸ்காட்லாந்திலுள்ள ஆலோவாவில் பிறந்தார். அவர் பெற்றோர் திருமதி & திரு. அலெக்ஸாண்டர் ஃபாரஸ்டர் பேட்டன். இவர்கள் ஆழ்ந்த தெய்வ பக்தியுள்ள செல்வந்தர்களாயிருந்தார்கள். ஆலோவாவில் ஒரு நூற்பு ஆலையும், அதிகமான சொத்துக்களையும் உடையவர்களுமாயிருந்தார்கள். இவர்கள் சர்ச் ஆப் ஸ்காட்லாந்தின் ஆர்வமிக்க உறுப்பினர்கள். சபையின் கடல் கடந்த மற்ற நாடுகளில் நடைபெற்ற மிஷனெரி பணியை ஆதரித்தனர். பெற்றோரின் எடுத்துக்காட்டான பக்தியுள்ள சூழ்நிலையில், இளம் ஏர்னஸ்ட் வளர்க்கப்பட்டார்.

ஏர்னஸ்ட் தம் பெற்றோரின் பெரும் மகிழ்ச்சிக்கு ஏற்ப மிஷனெரியாக செல்ல விருப்பம் தெரிவித்தார். ஸ்காட்லாந்தில் தன் பள்ளி படிப்பை முடித்து, ஏர்னஸ்ட் கல்லூரி படிப்பிற்காக லண்டன் சென்றார். அவர் கேம்பிரிட்ஜிலுள்ள கிங்ஸ் கல்லூரியில் சேர்ந்து படித்தார். மருத்துவ படிப்பு மிஷனெரியாக பணிபுரிய மிக உதவியாக இருக்கும் என கருதி பாதியிலேயே தனது கல்லூரிப் படிப்பை நிறுத்தினார். **1911**ம் ஆண்டு சீனா தேசத்தை மனதில் கொண்டு, அதே பல்கலைக்கழகத்தின் மருத்துவ கல்லூரியில் சேர்ந்தார். **1915**ம் ஆண்டு MB (Cantab) நிறைவு செய்து, பின்பு ஏறத்தாழ **1917**ம் ஆண்டு B.Ch (Cantab) படித்து முடித்தார். தற்போது முழு தகுதி பெற்ற மருத்துவராகவும் மார்புகூடு நிபுணராகவும் தனது மிஷனெரி சேவைக்கு ஆயத்தமாக இருந்தார். பின்னர் டாக்டர் பேட்டன் ஷயரோக சிறப்பு நிபுணராக DTM இந்தியாவில் படிப்பை நிறைவு செய்தார்.

**1915–**ல் MB இறுதி ஆண்டின்போது ஏர்னஸ்ட் டாக்டர் சவுரிராயன் ஜேசுதாசனை சந்தித்தார். டாக்டர் ஜேசுதாசன் சென்னை மருத்துவ கல்லூரியில் தனது LMB படிப்பை முடித்து MRCS படித்துக்கொண்டு லண்டனில் பணிபுரிந்துகொண்டிருந்தார். பின்னர் FRCS படிப்பை தொடர்ந்து முடித்தார். டாக்டர் ஜேசுதாசன், ஏழை எளிய மக்களுக்காக தன் வாழ்வை மிஷனெரி பணிக்கென அர்ப்பணிக்க முடிவு செய்திருந்தார். இவ்விரு மருத்துவர்களும் வாழ்நாள் முழுவதும் இணைபிரியா நண்பர்களானார்கள். மருத்துவர் டாக்டர் பேட்டன், அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜேசுதாசன் ஆகிய இருவரும் இந்தியாவிலுள்ள அர்ப்பணிக்கப்பட்ட மிஷனெரி டாக்டர் குழுக்களில் அவர்களின் கடின உழைப்பிற்காகவும், காப்பாற்றிய கணக்கற்ற உயிர்களுக்காகவும், புகழ்பெற்ற குழுக்களில் ஒன்றாக திகழ்கின்றனர்.

**1918**ம் ஆண்டு டாக்டர் ஜேசுதாசன், FRCS முழுமை செய்து, டாக்டர் பேட்டனுடன் இணைந்து, தங்கள் சேவையை சர்ச் ஆப் ஸ்காட்லாந்தின், யுனைடட்ஃபீ சர்ச் ஆப் ஸ்காட்லாந்து மிஷனுக்கு (UFCS) அளித்தனர். அவர்கள் பூனாவிலுள்ள தங்கள் மிஷன் மருத்துவமனைக்கு இருவரையும் அனுப்பினார்கள். பூனாவில் இருந்தபோது, இந்திய சுதேச மிஷனெரி (NMS) சங்கத்தோடு தொடர்பு கொண்டனர். சாது சுந்தர்சிங் அவர்கள் அதிகமாக வலியுறுத்தி வந்த ஆசிரமம் நிறுவும் திட்டத்தை மனதில் கொண்டு பூனாவில் தங்களின் இரண்டு வருட பணிகாலத்தை நிறைவு செய்து விட்டு, **1921**ம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் தேதி வட ஆற்காடு

மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் என்ற இடத்தில் ஒரு கிறிஸ்தவ ஆசிரமத்தை ஏற்படுத்தினார். திருபத்தூர் ரயில் நிலையத்திற்கு அருகில் ஒரு சிறிய வாடகை கட்டிடத்தில் அந்த ஆசிரமம் ஆரம்பிக்கப்பட்டது பின்பு டவுனிலிருந்து 2 கி.மீ தொலைவில் (புதுப்பேட்டை சாலையில்) மாற்றப்பட்டது. வழக்கமான மருத்துவ முறையை பின்பற்ற விரும்பாமல் ஆசிரமக் கொள்கைகளான ஆராதனை, சேவை, நற்செய்திப் பணியினை நிறைவேற்றி வந்தனர். பின்னர் 1926ம் ஆண்டு இது கிறிஸ்து குல ஆசிரமம் என பெயரிடப்பட்டது.

ஆசிரமம் தனக்கேற்ற விதிமுறைகளைக் கொண்டிருந்தது. வழிபாடு, கல்விப்பணி, நற்செய்தி போன்ற காரியங்கள் அன்றாட வாழ்க்கையில் வகுக்கப்பட்டன. மருத்துவர்கள் பேட்டனும், ஜேசுதாசனும் சிறந்த குழுவாக எந்நேரமும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் சேவை புரிந்து வந்தனர். திருப்பத்தூர் பகுதி வறண்டதானதால், பெரு வியாதிகளான காலரா, மலேரியா, டைப்பாய்டு, பிளேக், பெரிய அம்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தது. இக்குழுவினரால் எண்ணற்ற உயிர்கள் காப்பாற்றப்பட்டன. நகர மருத்துவ மனையை விட சிறப்பான அதிநவீன மருத்துவ வசதிகளுடனும், 125 படுக்கைகளுடனும் இந்த ஆசிரம மருத்துவமனை வளர்ந்தது. அதனோடு இணைந்து ஆசிரமம் கிறிஸ்தவ செயல்பாடுகளில் கவனம் செலுத்தியது. வேத ஆராய்ச்சி, தியானம், ஆராதனை, ஆவிக்குரிய பாடல்கள், இசை ஆகியவற்றில் வளர்ச்சி பெற்றது. ஆண்டவரின் திருப்பணிக்காக வாழ்வதற்காக தங்களின் அனைத்தையும் துறந்து, முற்றிலும் அர்ப்பணித்த தன்னார்வத் தொண்டர்களைக் கொண்டு கிறிஸ்தவ செயல்பாடுகளுக்கு முக்கிய இடமாக விளங்கியது.

டாக்டர் பேட்டன் திருப்பத்தூரில் இருந்தபோது அவரது தந்தை ஏராளமான சொத்துக்களை தன் மகனுக்காக வைத்து விட்டு மறுமைக்குள் சென்றார். டாக்டர் பேட்டன் அந்த சொத்துக்களில் ஒன்றையும் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் அனைத்தையும் ஆசிரமத்திற்கென்று கொடுத்தார். பிரதான மருத்துவமனைக் கட்டிடம், நூலகம் அனைத்தும் பேட்டன் குடுபத்தினரின் நிதியிலிருந்து உருவானவை.

மருத்துவர் பேட்டன் உடை, உணவு பழக்கவழக்கங்களில் முற்றிலும் இந்திய வாழ்க்கை முறையையே தழுவினார். தன்னை இந்தியாவுடனும், இந்தியர்களுடனும் பிணைத்துக் கொண்டார். அவர்களை தன்னுடையவர்களாகக் கருதினார். பேட்டன் இறுதிவரை ஆசிரமத்திலேயே வசித்தார். வயோதிபத்தின் காரணமாக செயல்கள் தளர்வுற்றாலும், அவருடைய பக்தி வைராக்கியம் குறையவில்லை. தன் ஆண்டவரின் சேவையைத் தொடர்ந்தார்.

இப்பரிசுத்தவான் 1970ம் ஆண்டு மே மாதம் 2ம் தேதி தனது 79வது வயதில் மறுமைக்குள் பிரவேசித்தார். இவரது வாழ்வில் 41 ஆண்டுகளை ஆண்டவரின் பணியில் கடுமையாக செலவழித்தார். செல்வந்தராக பிறந்து, அனைத்தையும் துறந்து, தூர தேசத்தில் வந்து பணிபுரிந்து மரித்தார். இந்தியாவில் பணமின்றி வறுமையையும், ஒன்றுமில்லாமையையும் தன் ஆண்டவருக்காக சகித்தார். 3 ஜோடி ஜிப்பாக்களும் வேஷ்டியும் தான் அவரது உடைமை. அதுவும் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டவைகள்தான். நன்றியுள்ள கிராமத்தார் இம்மகானின் இறுதி அஞ்சலிக்கு ஆயிரக்கணக்கில் திரண்டு வந்தனர். ஆசிரம ஜெப ஆலயத்தின் பின்புறத்தில் டாக்டர் ஜேசுதாஸின் அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

**"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன், இந்த என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்"** (யோபு 19:25,26) என்ற வாக்குறுதியுடன் தாங்கள் பிரயாசங்களை விட்டு ஓய்ந்திருக்கிறார்கள்.

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

நாள்
14.08.2010, சனிக்கிழமை

நேரம்
மாலை 5.00 மணி
முதல் 7.00 மணி வரை

இடம்
**ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

சிறப்பு செய்தி : **Rev. P. ஏசுதாசன்** A.G. Church, திருவட்டார்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு:– சகோ. செல்வதுரை, Cell : 94876-89869,
சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820

## தேசத்திற்கான ஜெபக்குறிப்புகள்

1. இந்தியாவை ஆளுகைச் செய்யும் பிசாசின் வல்லமைகள், அசுத்த வல்லமைகள், அந்தகார வல்லமைகள் வெளியேற... (எரேமியா 10:11)
2. இந்தியாவிலுள்ள 120 கோடிக்கும் அதிகமான எல்லா ஜனங்களும் இயேசுவை தெய்வமாக அறிந்து கொள்ள.. (I தீமோ. 2:4)
3. இந்தியாவிலுள்ள ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், M.P.-க்கள், M.L.A.–க்கள், உயர் அதிகாரிகள், அலுவலர்கள் கர்த்தருக்குப் பயந்து உண்மையாக தேசத்திற்காக தொண்டு செய்யவும், அவர்களின் பாதுகாவல் மற்றும் அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும் (I தீமோ. 2:2)
4. இந்தியாவில் கொலை, கொள்ளை, குடி, போதை, விபச்சாரம், வேசித்தன பாவப்பழக்கங்களிலுள்ள ஜனங்கள் இரட்சிக்கப்பட... (எசே. 34:27)
5. இந்தியாவிலுள்ள தீவிரவாதிகள், மந்திரவாதிகள், நக்சலைட்டுகள், ஜாதி, மத கலவரங்களை தூண்டுபவர்கள் மனம்திரும்ப... (எசா. 45:23)
6. இந்தியாவில் சுவிசேஷம் அறிவிக்க திரளான ஊழியர்கள், மிஷனெரிகள் எழும்ப, எல்லா இடங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட.. (மத். 9:37,38)
7. இந்தியாவில் ஐந்து விதமான ஊழியஞ்செய்யும் ஊழியர்களைத் தேவன் அக்கினி ஜுவாலையாய் வல்லமையாகப் பயன்படுத்த... (சங். 104:4)
8. இந்தியாவில் நடைபெற்று வரும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட, சபைகள் ஸ்தாபிக்கப்பட, ஆத்துமாக்கள் திரளாய் சேர்க்கப்பட... (அப். 2:47; 9:31)
9. இந்தியாவிற்காக திறப்பிலே நின்று ஜெபிக்கும் முழங்கால் யுத்த ஜெபவீரர்களைத் தேவன் திரள்திரளாய் எழுப்ப... (எசே 22:30)
10. இந்தியாவில் தேவன் பின்மாரி மழையை ஊற்ற, மிகப்பெரிய எழுப்புதலை கட்டளையிட... (சக 10:1)



# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் “V. DEVADASS” (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

AXIS BANK

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

ICICI Bank

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

"எழும்பு, எழும்பு, சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள்" ஏசா. 52:1

*சத்தியமங்கலத்தில்*

# எழுப்புதல் பெருவிழா - 2010

| நாள் | நேரம் |
|---|---|
| **13,14&15 ஆகஸ்ட் - 2010**<br>**வெள்ளி, சனி, ஞாயிறு** | **தினமும்**<br>**மாலை 6.00 மணிக்கு** |

இடம்

**மீனாட்சி திருமண மண்டபம்**

சத்தியமங்கலம் –2.

தேவ செய்தியாளர்கள்

**Rt. Rev. Dr.V. தேவதாஸ்**



**சகோதரி வஹிதா தேவதாஸ்**



*இனிமையான பாடல்கள்...*

*மகிமையான துதி ஆராதனை வேளை...*

*மிஷனெரி சாட்சிகள்...*

*அனல் மூட்டும் எழுப்புதல் செய்தி...*

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு*

*ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,*

*தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும்*

*அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு

**சகோ. R. ஜெபசிங் சந்தோஷம்,**

**ஷாலோம், சத்தியமங்கலம். Cell : 94421 - 40655C 94881 - 41655**

## நாட்டு நடப்புச் செய்திகள்....

தென் ஆப்ரிக்காவில் உலக கோப்பை கால்பந்து திருவிழா கடந்த ஜீன் 11ம் தேதி தொடங்கியது. 32 அணிகள் பங்கேற்ற இத்தொடரில் தர வரிசையில் 2ம் இடத்தில் உள்ள ஸ்பெயினும், நெதர்லாந்து அணிகளும் மோதின. லீக் சுற்றிலிருந்து தோல்வியே சந்திக்காத நெதர்லாந்தும், தொடக்கத்தில் தட்டுத்தடுமாறினாலும் அரை இறுதியில் பலமிக்க ஜெர்மனியை வீழ்த்திய தெம்பில் ஸ்பெயினும் முதன் முறையாக உலக கோப்பையை வெல்ல களமிறங்கின. உலக கோப்பை தொடரில் பரபரப்பாக நடந்த இறுதிப் போட்டியில், கடைசி நேரத்தில் இனெஸ்டா கோல் அடிக்க ஸ்பெயின் 1 – 0 என்ற கணக்கில் முதன் முறையாக உலக சாம்பியன் பட்டத்தை வென்றது.

தீவிரவாத அமைப்புகளுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் நிதி உதவி செய்யப்படுவதை இந்திய சட்டங்களால் தடுக்க முடியவில்லை என்று ஜி 7 நாடுகளின் துணை அமைப்பு அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. இந்தியாவில் 20 இலட்சம் தொண்டு நிறுவனங்கள் இயங்குவதாக அரசு புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. இந்திய தொண்டு நிறுவனங்களை பல்வேறு அரசு துறையின் கீழ் பதிவு செய்துள்ளனர். சில தொண்டு நிறுவனங்கள் அரசிடம் பதிவு செய்யப்படாமல் நடத்தப்படுகிறது.

சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் பொறியில் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான கவுன்சலிங் நடந்து வருகிறது. போலி மதிப்பெண் பட்டியல் கொடுத்து கவுன்சலிங்களில் பங்கேற்ற 41 மாணவர்கள் சிக்கினர். அவர்களுக்கு போலி மதிப்பெண் தயாரித்து கொடுத்த 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்படுகிறது.

நீண்ட நாட்களாக தாமதமாகி வந்த போயிங் 787 ரக விமானம் இங்கிலாந்தின் பார்னபரோ நகரில் நடைபெறும் சர்வதேச விமான கண்காட்சியில் அறிமுகம் செய்யப்பட்டது. உலகிலேயே குறைவான எடையில் தயாரிக்கப்பட்ட முதல் பயணிகள் விமானம் என்ற பெருமை இதற்குக் கிடைத்துள்ளது. அத்துடன், சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. கூடுதல் ஆய்வுகள் செய்ய வேண்டி இருப்பதால், முதல் விமானம் அடுத்த ஆண்டு துவக்கத்தில்தான் டெலிவரி செய்யப்படும். 56 நாடுகளிலிருந்து 863 விமானங்களுக்கான ஆர்டர்கள் குவிந்துள்ளன.


### எங்களுடன் தொடர்பு கொள்ள

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## கிராம ஆலயம் அம்பாபாடா இராஜஸ்தான்



இராஜஸ்தான் மாநிலத்தில், பாஞ்வாடா மாவட்டத்தில், குசல்கட் தாலுகாவில் மிகவும் பின் தங்கிய கிராமம்தான் இந்த அம்பாவாடா. இங்குள்ள பீல் ஆதிவாசி மக்கள், இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறியாமல், குடித்து, வெறித்து, கொள்ளையடித்து இன்னும் பலவிதமான பாவங்கள் செய்து அந்தகாரத்தில் வாழ்ந்து வந்தனர். இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சகோ. கல்லா B. டாமோர். இந்த சகோதரரின் தாயார் லக்குவா வியாதியினால் பாதிக்கப்பட்டு மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நோய் நீங்க பல மருத்துவர்கள் மற்றும் மந்திரவாதிகளை நாடியும் எந்த பலனுமில்லை. மிகவும் சோர்ந்து போன நிலையில் இருந்தது அவர்கள் குடும்பம். இந்த நேரத்தில் அவர்கள் கிராமத்தின் அருகிலுள்ள மகர்தா என்ற கிராமத்தில் இயேசு கூட்டம் நடைபெறுகிறது என்றும், அங்கு சென்றால் தனது தாயாருக்கு சுகம் கிடைக்கும் என்றும் கேள்விப்பட்டு, அங்கு தனது தாயாரை அழைத்துச் சென்றார். கூட்டத்தில் கலந்து கொண்டு பாரத்துடன் ஜெபித்தபோது, தேவன் அற்புதம் செய்தார், ஆம்! அந்த சகோதரிக்கு பூரண சுகம் அந்தக் கூட்டத்தில் கிடைத்தது. அந்தத் தாயாருக்கு பூரண சுகம் கிடைத்தவுடன், அவருடைய குடும்பத்தார் முழுவதும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். மேலும் சகோ. கல்லா B. டாமோரை தேவன் ஊழியத்திற்கென்று அழைக்கவே, நமது ஷாலோம் ஊழியத்தின் மூலம் வேதாகமப் பயிற்சி பெற்று, அவருடைய சொந்த ஊரில் (அம்பாபாடா) தனது வீட்டில் ஆராதனையை ஆரம்பித்தார். விசுவாசிகள் அதிகம் வரவே, அங்கு ஆலயம் அவசியம் என உணர்ந்து ஜெபித்து, தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகத் தந்தார். அந்த இடத்தில், கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட ஆலயம் கட்டப்பட்டு 21.04.2010 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. மேலும் இவர் தற்போது 25 குடும்பங்களை ஆண்டவருக்குள் வழிநடத்தி வருகிறார். தேவனுக்கே மகிமை!

இந்த கிராம ஆலயம், திருவட்டாரைச் சேர்ந்த Pr. ஏசுதாஸ் (A.G. சபை) அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியிலிருந்து கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம் அல்லது ரூ. 60 ஆயிரம் நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **பிரேம லதா** |
| தகப்பனார் பெயர் | : | சோம்சிங் புரியா |
| தாயார் பெயர் | : | கமலிபேன் |
| படிக்கும் வகுப்பு | : | IV Std., |
| சொந்த ஊரின் பெயர் | : | பிப்ளா |
| மாவட்டம் | : | ஜாபுவா |
| மாநிலம் | : | மத்தியப்பிரதேசம் |

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

பிரேம லதாவின் தந்தை இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறியாமல் மிகவும் அந்தகாரத்திற்குள் வாழ்ந்து வந்தவர். இவர் மந்திரவாதிகளை முன்னோடியாகவும், தலைவர்களாகவும் மதித்து, அசுத்த ஆவிகளை வணங்கி வந்தவர். இவர் சாராயம் குடித்துவிட்டு காரணமின்றி அனைவருடனும் சண்டையிடுவார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இவரது முழு குடும்பமும் வியாதிப்பட்டது. இவருடைய தாயார் மிக அதிகமாக நோய்வாய்ப்பட்டார். மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை அளித்தும், அசுத்த ஆவிகளுக்கும் தேவதைகளுக்கும் பல்வேறு பலிகள் செலுத்தியும் எவ்வித பலனுமில்லை. இறுதியில் அமளியமாள் கிராமத்திலுள்ள ஷாலோம் சபையில் நடைபெறும் கூட்டத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு தன்னுடைய தாயாரை ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்று, ஜெபித்தபோது தேவன் பரிபூரண விடுதலை கொடுத்தார். தன் தாயாருக்கு சுகம் கொடுத்த தேவனை குடும்பமாக சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இவர் தற்போது தன் சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** ஜெபம், பாடல் பாடுவது, விளையாட்டு ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் உண்டு. படித்து முடித்தபின்பு ஊழியக்காரியாக வேண்டும் என்ற விருப்பம் உண்டு.

**ஜெபியுங்கள்:-** இவள் நன்றாக படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், பெற்றோர் செய்கின்ற ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர் :** Miss. P. Kirthika, Bangalore.

நீங்களும் மாதம் ரூ. 400/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்து தாங்க முன் வரலாம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss